பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ரா
ம்
கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

# Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 16 | வெள்ளிக்கிழமை | (03.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 288



இடைக்கால நிர்வாகசபை தொடர்பான வரைபுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்காக சட்ட ஆலோசனைகளை மேற்கொள்ளும்பொருட்டு வட- அயர்லாந்து செல்லும்முகமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தளபதி கருணா, மகளிர் துணை அரசியல் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டரில் புறப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## புலனாய்வு உறுப்பினர் வெட்டிக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இராணுவப். புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் 22 ஆவது இராணுவப் படைப்பிரிவை அண்மித்த பகுதியிலேயே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் விக்னேஸ்வரன் பாபு என்பவரே வெட்டிக்கொல்லப்பட்டவராவார். முகாமை அண்மித்த பகுதியினூடாக இவர் சென்றுகொண்டிருந்தபோது, மறைந்திருந்து சிலர் இவரைக் கடுமையாகத் தாக்கிய பின்னர் வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினரும், பொலிஸாரும் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இராணுவத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான இடைக்காலசபை இறுதிவடிவம் அயர்லாந்தில் தீர்மானிக்கப்படும்

## அங்கு புறப்படமுன் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்த திட்டவரைபிற்கு தீர்க்கமானதும், இறுதியானதுமான வடிவத்தைக் கொடுக்கும் ஆலோசனைக் கூட்டமாக அயர்லாந்து "டப்ளின்" நகரத்தில் இடம்பெறும் கலந்துரையாடல் அமையும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நாளை மறுதினம் முதல் 10ஆம் திகதிவரை அயர்லாந்தில் விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களுடனும், சர்வதேச சட்ட வல்லுநர்களுடனும் கலந்துரையாடுவதற்கு நேற்றுக் காலை கிளிநொச்சியில் இருந்து உலங்கு வானூர்திமூலம் கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர் மத்தியில் பேசும்போதே சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமது அயர்லாந்து விஜயம் குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதிநிதிகள் இன்று அயர்லாந்து பயணம்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபை குறித்த பரிஸ் திட்ட வரைபை அயர்லாந்தில் ஆராய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இன்று காலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அயர்லாந்துக்கு புறப்படவுள்ளனர்.

சு.ப. தமிழ்ச் செல்வன் தலைமை

(10ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை முறியடிக்க எதிர்க்கட்சிகள் திட்டம் தீட்டியுள்ளன

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆதங்கம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்படவுள்ள இடைக்காலத் திட்ட வரைபுக்கும், இடைக்காலத் திட்ட வரைபு தொடர்பான அரசின் நிலைப்பாட்டுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படலாம். ஆனால், அத்தகைய வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உண்டு.

இவ்வாறு அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகும் அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுக்களில், ஒவ்வொரு சுற்றிலும் கலந்துரையாடல்கள் நடைபெறும் தினத்தை அதிகரிக்க எண்ணியிருக்கின்றோம்.

எனினும், இந்த விடயத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப்பெண்களின் ஆளுமையை வெளிப்படுத்த களம் அமைத்தது விடுதலைப் போர்

### மகளிர் சங்கமம் நிகழ்வில் கலைவிழி

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள், தம் ஆளுமையை வெளிப்படுத்த விடுதலைப் போராட்டம் நல்லதொரு களம்அமைத்துத் தந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி எமது விடுதலையை நாமே விரைவுபடுத்த வேண்டும்.

நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமம் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திருமதி வேதவல்லி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை யாழ் மாவட்ட அரசாங்க அதிபா எஸ்.பத்மநாதன், சிவஸ்ரீ.க.யோகீஸ்வரக்குருக்கள், வண.பிதா டேமியன் அடிகளார் ஆகியோரும் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழியும், ஈகச்சுடரை மாவீரர் காவிய வேந்தனின் தாயாரும் ஏற்றி வைத்தனர்.

சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நிகழ்த்தினார்.

கலைவிழி தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில், ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக களத்தில் சாதனை புரிந்த வரலாற்றைக் கொண்டவர்கள் நாம். இடைப்பட்ட காலத்தில் எம்மைத் தாழ்மைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று ஒரு தகவல்

## நேரம் தவறாமை

நேரம் எனும் புதையலை நோக்கி நாம் பயணம் செய்துகொண்டிருக்கின்றோம். கண்ணதாசன் பாடிய இரண்டு வரிகள் நினைவுக்கு வருகின்றன. ‘‘ஐம்பதிலே ஆசை வந்தால் நீரிலும் தேன் ஊறும்’’ நிறையப் பேருக்கு ஆசைகள் அதிகம் உண்டு. படிக்க வேண்டும், உத்தி யோகத்தில் உயர வேண்டும், பணம் சம்பாதிக்கவேண்டும் என்று பல ஆசைகள் உண்டு. ஆனால் அவற்றைச் சாதிப்பதற்கு வேண்டிய மன வலிமை அதிகமா னோரிடத்தில் காணப்படுவதில்லை.

இதனால்‘‘ எனக்கு அதிஷ்டம் இல்லை என்னை முன் னேற்றுவதற்கு ஆளில்லை’’ என்றெல்லாம் அங்கலாய்த் துக்கொள்கின்றார்கள். இன்று நாம் பார்க்கும் பொழுது மனம் என்பது என்ன? மூளை என்பது என்ன? மூளை எனும் பரிணாமத்தைப் பொறுத்த வரை யாவருமே ஒரே விதமாகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றார்கள். யாராவது ஒரு மருத்துவரிடம் சென்று கேட்டுப் பார்த் தால் தெரியும். அவர்கள் கூறுவார்கள் மூளையைப் பொறுத்தவரையில் யாருக்கும் எந்த விதமான வித்தியாச மும் இல்லாமல்த்தான் நாம் படைக்கப்பட்டிருக் கின்றோம். மூளையில் இருக்கக்கூடிய பாகங்கள் அதன் அமைவிடம் நிறை, செயல் வடிவம் ஆகியன அனைத்துமே எல்லோருக்கும் ஒன்றுதான் .

அப்படி என்றால் நாம் எப்படி மாறுபடுகின்றோம்? மனம் எனும் ஒரு பரிணாமத்தில் தான் நாம் மாறுபடுகின் றோம். அப்படி என்றால் நேரம் என்று ஒரு பொருள் உண்டு. அந்தப்பொருளை நல்லவிதமாகப்பயன்படுத் திக்கொள்ளவேண்டுமென்றால் மனம் எனும் பரிணாமத் தைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மனம் ஒன்றை நினைத்தால் தான் செயல் வடிவம்பெற முடியும். ஒருவர் வேலைக்குத் தினமும் காலம் தாழ்த்தி வருகின்றார். நேரம் பிந்தித் தனது வேலைகளைச் செய் கின்றார் என்றால் இதற்கு என்ன காரணம்? அவருக் குத்தான் காலம் தாழ்த்தி வருவது தெரியும்! இருந் தாலும் அதனை மாற்றிக்கொள்ள மாட்டார். தனது வசதிக்கு ஏற்ப மற்றவர்களை மாற்ற நினைப்பார். ஆனால் என்று அவர் தனது நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்கின்றாரோ அன்று தான் மாற முடியும்.

ஒரு வேலையை உரிய நேரத்தில் செய்ய வேண்டும். அப்படி உரிய நேரத்தில் செய்ய முடியாவிட்டால் அதற் கான விளைவையும் நாம் தான் அனுபவிக்க வேண்டும். நமது வாழ்வில் எத்தனையோ பங்குகள் உண்டு. தகப்பனாக, மகனாக ,மாணவனாக, அலுவலராக என்று பல பங்குகள் உண்டு.

நம்மில் பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றோம் உத்தி யோகத்தில் முன்னேற வேண்டுமானால் குடும்ப வாழ்வை தியாகம் செய்ய வேண்டும் என்று அப்படி அல்ல. ஒவ் வொரு பங்கிற்கும் உரிய நேரத்தை ஒதுக்கவேண்டும்.

எனக்குத்தெரிந்த ஒருவர் மிக நீண்ட நாட்களுக்கு முன்னர் ஒரு கதை எழுதினார். ஒரு போர்க்களம் அங்கு ஒரு இராணுவ வீரன் இறக்கப்போகின்றான் இறக்கும் தறுவாயில் தனது நண்பனைக்கூப்பிட்டு தன் தந் தைக்கு ஒரு கடிதத்தை எழுதச் சொல்கின்றான். கடிதம் தந்தையிடம் செல்கின்றது. தந்தையும் அந்தக்கடி தத்தை படிக்கப் போகின்றார். அவ்வாறு படிக்கும் நேரத்தில் தனது மகன் உயிருடன் இல்லை என்ற விடயம் அவருக்குத்தெரியாது.

அந்தக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது. அப்பா! உங்களுக்கு நினைவிருக்கின்றதா?சிறு வயதில் நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது என் பள் ளிக்கூடத்திற்கு வரவேண்டும் என்று உங்களைக் கேட்டி ருந்தேன் வருவீர்கள் என்றும் நினைத்திருந்தேன் ஆனால் நீங்கள் வரவில்லை.

ஆண்டு விழா வந்தது. நான் அன்று பல பரிசில்களைப் பெறப்போகின்றேன். வந்து கண்டுகளியுங்கள் என்றேன். அதற்காவது வாருங்கள் என்றேன். நீங்கள் வரவில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை முழுவதையும் என் னோடு செலவிடுங்கள் என்று கேட்டேன். அதனையும் நீங் கள் செய்யவில்லை. ஒரு செய்யுள் எழுதினேன். பாடல் எழுதினேன். படித்துக்காண்பித்தேன் நீங்கள் ரசித்துப் பாராட்டுவீர்கள் என்ற எதிர் பார்ப்போடு. ஆனால் நீங்கள் ரசிக்க வில்லை. அதற்கு நேரமில்லை என்று கூறிவிட் டீர்கள். நாடு என்னை அழைத்தது. ‘‘ஜாக்கிரதையாகத் திரும்பி வா!’’ என்று கூறி என்னை அனுப்பினீர்கள் ! ஆனால நான் வரவில்லை.

இந்தக்கடிதத்தை நான் படிக்கும் போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன்.

நாம் நினைத்துக்கொண்டிருக்கின்றோம் நமது உறவி னர்கள், குழந்தைகள், பெரியவர்கள், உற்றார், பெற்றோர் எல்லோரும் அப்படியே இருப்பார்கள் என்று. ஆனால் அவர்களும் அப்படியே இருக்கப்போவதில்லை. நாமும் இப்படியே இருக்கப்போவதில்லை. ஒரு ‘‘மூவ்மென்ட்’’ என்று கூறுவார்கள். அதாவது வாழ்க்கையில் ஓர் அத் தயாயம் முடிந்து வருகின்றது. நடந்து வருகின்றது என்றோ ஒரு நாள் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி இருக்கும். இதனை மனதில் வைத்துக்கொண்டு நாம் அன்றாடம் பழகும் நபர்களோடு சந்தோசத்தை அளிக்கும் விதத்தில் பழகி நமது வாழ்க்கையையும் இன்பமானதாக்கிக் கொள்ளவேண்டும்.

*என்.டி.ஸ்ரீதரன்*

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆ.கு.

# அமைச்சரவைப் பத்திரம் பற்றிய விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் நிர்வாகக் கட டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண டிய மாற்றங்கள் தொடர்பான அமைச் சரவைப் பத்திரம் குறித்து விசாரிக் கப்படவேண்டும் என ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆணைக் குழுவில் அங்கத்தவர்களின் வெற் றிடங்களைப் பூர்த்தி செய்து ஸ்தம் பிதம் அடைந்துள்ள பணிகளுக்கு உயிரூட்டும் நோக்கில் சில மாதங் களுக்கு முன்னர் இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழுவின் நிர்வாகக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அர சாங்கம் அமைச்சரவையில் முன் மொழிந்த போது, அதனை ஜனாதி பதி ஆட்சேபித்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

இதற்கிடையில், இவ்விடயம் தொடர்பாக ஏனைய அரசியல் கட்சி களுடன் பேச்சுவார்த்தை நடத்த வில்லை என ஜனாதிபதி தெரி வித்து வரும் குற்றச்சாட்டுக்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரா கரித்துள்ளதாகவும் அண்மையில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நடத்திய கூட்டத்தில் இந்த விடயங் கள் பற்றி ஆராய்ந்ததாகவும் பிரத மர் அலுவலக வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (உ-60,10)

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் ஜனாதிபதியின் பங்கு இன்றியமையாதது

## பி.பி.சிக்கு டக்ளஸ் எம்.பி. பேட்டி

(லண்டன்)

தற்காலிகமாக இணைக்கப்பட் டுள்ள வடக்குக் கிழக்கு மாகாணங் கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு, ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியுடன் இடம் பெற்ற சந்திப்புத்தொடர்பாக பி.பி. சிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டக்ளஸ் மேலும் தெரிவிக்கை யில்,

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஜே.வி.பியினர் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆனால், வடக்குக் கிழக்கு புலி களின் கைகளின கீழ செலவத னையே அவர்கள் விரும்பவில்லை. இது விடயம் சம்பந்தமாக ஜே.வி. பியினருடன் நாங்கள் பேசியிருக்கி றோம்.

ஆனால், வடக்கு-கிழக்கு இணைந் திருப்பதை முஸ்லிம்கள் விரும்பாத சூழ்நிலை ஒன்று இன்று உருவாகி வருகின்றது. இதற்கு விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளே காரணமாக அமைந்துள்ளன.

வடக்கு-கிழக்கு சம்பந்தமான



முடிவுகளை எடுக்க வேண்டியது ஜனாதிபதியே. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஜனாதிபதியின் பங்கு இன்றியமை யாதது என்று கூறியுள்ளார். (த)

## இராசி பலன்

**03. 10. 2003**

**புரட்டாதி 16, வெள்ளி)**

**அட்டமி- பி. ப. 4.05வரை**

**பூராடம்- பி.இ. 12.58 வரை**

**இராகுகாலம் - 10.32 -12.02**

**சுபநேரம் -6.02.-7.32**

**அட்டமி, நவமி**

**மேடம்**
தெய்வ தரிசனம், ஆன்றோர் மதிப்பு , புதிய திட்டமிடல், முயற்சி தாமதம்

**இடபம்**
உடல் வியாதி, எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம், காரிய தாமதம்,

**மிதுனம்**
களஸ்திர நன்மை, நண்பர்கள் உதவி, தெய்வ தரிசனம், காரிய சித்தி

**கடகம்**
திடீர் பயணம், தனவரவு, சுகவாழ்வு, தொழில் விருத்தி

**சிங்கம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், கடும் வார்த்தை

**கன்னி**
கல்வியில் ஆர்வம், மனப்பயம், உஷ்ண ரோகம், பிரயாணம்

**துலாம்**
வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை, காரிய நன்மை

**விருச்சிகம்**
மதிப்புக் குறைவடைதல், வேலைக் கஷ்டம், எதிர்பாராத நன்மை, தன விரயம

**தனுசு**
நல்ல முயற்சி, ஜனவசியம், புதிய பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம்

**மகரம்**
பிதாசிந்தை, பிரயாணக் கஷ்டம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்,

**கும்பம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ தரிசனம், கலந்துரையாடல், நல்ல வருமானம்,

**மீனம்**
சுப நிகழ்வு, உற்சாகம் , காரிய சித்தி, தொழில் விருத்தி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# சப்இன்ஸ்பெக்டருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை சித் திரவதை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் ஒருவரைகைது செய்யு மாறு பிடியாணை பிறப்பிக்கப்பட் டுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு எதி ராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளுக் நீதிமன்றத்தில் சமுகமளிக்க மேற படி இன்ஸ்பெக்டர் தவறியதனால், மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். சிறிஸ் கந்தராசா அவரைக்கைது செய்யும் படி உத்தரவிட்டார்.

1996ஆம் ஆண்டு வெள்ளவத் தைப் பிரதேசத்தில் இரத்தினக் கற்களைக் களவாடிய குற்றச்சாட் டின்பேரில் இந்தச் சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போதே, மேற்படி இன்ஸ்பெக்டர் இவ ரைச் சித்திரவதை செய்ததாக வழக் குத்தாக்கல் செய்யப்பட்டது. (தி-61)

# ஜெயவர்த்தனபுர பல்கலையை திறக்க ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

கடந்த 24ஆம்திகதி முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ள ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழ கத்தை மீண்டும் திறக்கும் நடவடிக் கைகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டு வருகிறார்.

இப்பல்கலைக்கழகத்தின் தற் போதைய நிலைவரம் குறித்து ஆராயும் பொருட்டு, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுப் பிரதிநிதிக ளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே கடந்த செவ்வாயன்று மாலை ஜனாதிபதி மாளிகையில் விசேட பேச்சு வார்த்தை ஒன்று நடை பெற்றது.

இப்பேச்சு வார்த்தைகளில் எடுக் கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, இன்னும் ஓரிரு நாள்களில் ஜனாதி பதி முக்கிய முடிவுகளை எடுக்கவுள் ளார்.

இருமாணவக்குழுக்கள் இடையே ஏற்பட்ட மோதலை அடுத்தே, இப் பல்கலைக்கழகம் காலவரையறை யின்றி மூடப்பட்டுள்ளது. (தி-61)

# மூதாளர் பேணகத்தில் முதியோர்தின நிகழ்வு

(கிளிநொச்சி)

சர்வதேச முதியோர் தினத்தை யொட்டி கனகபுரம் அன்புச்சோலை மூதா ளர் பேணகத்தில் நேற்று முனதினம் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர்துயிலும் இல்லப் பொறுப்பா ளர் பொன் தியாகமும், மாவீரர் போரா ளிகள் குடும்பநல காப்பகத்தின் பொறுப பாளர் திருக்குமரனும் ஏற்றிவைக்கத தமிழீழத் தேசியக் கொடியினை விடு தலைப்புலிகளின் அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் எஸ். தங்க னும் ஏற்றிவைத்தனர்.

பேணகத்தின் பொறுப்பாளர் குரு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ வில் சிறப்புரையினை விடுதலைப் புலி களின் மகளிர் துறைப்பொறுப்பாளா தமிழினி மற்றும் கிளிநொச்சி வல யக் கல்விப் பணிப்பாளர் அரியரட் ணம் ஆகியோர் நிகழ்த்தினர். (உ-63)

வெள்ளி முற்றம்

# யாருக்குப் பிச்சை?

''இன்றோ நாளையோ! காலன் வருவதற்கு முன் ஏதாவது சில தருமங்களையாவது செய்ய வேண்டும்'' என்று கிழவன் நினைத்தார். கோவிலைப் புனர்நிர்மாணம் செய்யலாம், உடைந்த பாடசாலையில் ஒரு வகுப்பறையை ஆவது கட்டுவிக்கலாம், இவற்றை விட வீடு வாசல்களை இழந்த அகதிகளுக்கு ஒரு கொட்டிலைப்போட்டுக் கொடுக்கலாம் என நினைவுகள் வளர்ந்த நேரத்தில், கிழவருக்குத் தனது கையிருப்புகள் பற்றிய கேள்வியும் எழவே.தனது பற்றாக்குறையான வருமானத்துக்கு இவை ஒன்றும் கட்டுபடியாகா வென்று அந் நினைவுகளை முறித்துக்கொண்டார். ஆனாலும் வரப்போகும் மரணம் பற்றிய பயம் எதையாவது தான தருமங்களைச் செய்து போகும் வழியைப் புனிதப்படுத்த வேண்டும் என்ற மனத்தூண்டலைப் பெற்றார். அவரால் நிம்மதியாகஇருக்க முடியவில்லை. சிக்கனமாக இரண்டொரு ஏழைகளைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து நாள்தோறும் ஒரு வேளை, உணவுகொடுக்கலாம்என நினைத்தார். நாள்தோறுமென்றால் அது ஒரும் சரிப்பட்டு வராது. காய் பிஞ்சு தேடுவது சமைப்பது கொடுப்பதில் உள்ள சிரமம் தாங்கக் கூடிய தல்ல; வாரத்தில் ஒரு நாள் வெள்ளிக் கிழமைகளில் இரண்டொரு வறுமைப் பட்ட சனங்களை அழைத்து வந்து ஒரு வேளை உணவு படைக்கலாம் என்று தீர்மானித்து, அதிகார அம்மணியான தனது சகதர்மினியிடம் தீர்மான வாசகங்களை முன்மொழிந்தார்.


''அதற்கென்ன ! வெள்ளிக்கிழமைகளில் அரைப்படி அரிசியைக் கூடப் போட்டால் ஆச்சுது. அதற்காக யார் யாரோ பரதேசிகளையெல்லாம் வீட்டுக்குக் கூட்டி வர வேண்டாம் கோவிலடியில் இருப்பவர்களுக்கு உங்கள ஆசை தீர இரண்டு மூன்று பாசலைக் கொடுப்பதுடன் நீங்களும் சாமி கும்பிடுவதாகுது. அப்படியே செய்யுங்கள் என்று ஆஞ்ஞையிட்டாள்.

இது நடந்து மூன்று நான்கு வாரங்களாகக் கிழவர் ஒவ்வொரு சுக்கிர வாரத்திலும் நான்கு மூன்று உணவுப் பொதிகளுடன் கோவிலடிக்குப் போய் வந்தார். அங்கே பாத்திர மறிந்து பிச்சை இடுவதில் அவருக்குக் கஷ்டம இருக்க வில்லை .கால் ஒன்று குறைந்த முடவர் ஒருவர், கண்பார்வை குறைந்த ஒருவர்,ஒரு வயோதிபத்தாயும் அவரது பேரக் குழந்தையும் வாரந் தோறும அவரது வரவைப் பார்த்திருக்கும் வாடிக்கைக் காரர்கள்.இவரைக் கண்டதும் அவர்கள் முகமலர்ச்சியுடன் கைகளை நீட்டுவதும், இவர் தனது பரிதாப உணர்ச்சியைக் கண்களிலும் முகத்திலும் வருவித்துக்கொண்டு பார்சலைப் பத்திரமாக அவர்களின் கைகளில் கொடுத்து உவகை கொள்வதுமாகக காலஞ் சென்று கொண்டிருந்தது.

சில நாட்களாக புதிய ஒரு அதிதியைப் பிச்சைக்காரர் கூட்டத்துள் தினமும் வழிபடுவோர் சிலர் பார்த்தனர். அந்தப் புதிய முகம் பிச்சை கேட்பதையோ,சிதறு தேங்காய் பொறுக்குவதையோ,பார்சல் எடுக்கப் பறப்பதையோ எவரும் காணவில்லை. உடலிலே அவயவக்குறைவு எதுவுமில்லை என்றாலும் உடல் மெலிந்து முகத்தில் சோகம் அப்பியிருந்தது. அயலில் உள்ள வேம்பின் நிழலில இருப்பதும் எழுந்து சென்று குழாயில் நீர் பிடித்துக் கால்முகங்களைக கழுவுவதும் கோவில் முகப்பில் சென்று திருநீறு எடுத்துப் பூசுவதுமாக இருந்தார். அடிக்கடி சென்று குழாயில் நீர் குடித்து, மூக்காலும் வாயாலும் காற்றை உள்வாங்கி வயிற்றை நிரப்பினார் போலும். என்னவோ அப்படி அடிக்கடி செய்தார். இவரைப்பார்த்த் சிலர் தம்பாட்டில் பல ஊகங்களை வெளிப்படுத்தினர்.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் வழியில் உடமைகளையெல்லாம் பறிகொடுத்துப் பயித்தியமாகி விட்டாராம் என்றார் ஒருவர். மற்றவரின் செய்தி மாறுபட்டிருந்தது. வெளிநாட்டில் இருந்து வீட்டிற்கு வந்தவன் தன் மனைவி வேறொருவருடன் வாழ்வதாக அறிந்து விசராகி விட்டான் என்று கூறினர். இத்தகைய கதைகளைக் கூறுவதன் மூலம் இப் புதிய வரும் இப்படியான ஒருவர் தான் என்ற தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினரேயன்றி அவர் யார் எந்தவூர் என்று கூட அறிய எத்தனிக்கவில்லை.அப்படியே ஒவ்வொருவரும் தானும் தன்பாடும் என்று இருந்தனர்.

இந்த நிலையில் தான் அடுத்த வெள்ளிக்கிழமையும் வந்தது. அன்று பௌர்ணமி விரத நாளாகவும் இருந்தது. வழக்கத்தைவிடக் கோவிலில் அன்று வழிபடுவோர் தொகையும் அதிகமாக இருந்தது. பல விரதிகள் சாப்பாட்டுப் பொதிகளுடன் வந்து கோவிலயலிலும் தேரடியிலும் தங்கியுள்ள பலருக்கும் விநியோகம் செய்தனர். இவர்களுடனேயே தங்கியிருந்த அந்தப் புதிய முகம் எவரிடமும் உணவுப்பார்சலைப் பெறாமல் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தது. அதன் மனதில் என்ன வைராககியமோ? யாரறிவார். ஏற்பது இகழ்ச்சி என்ற கருத்தோ! என்னவோ வாடிய முகத்தோடு வயிற்றைக் காற்றையும் நீரையும் புசித்து நிரப்பிக் கொண்டு வேப்பமர நிழற் கீழ் இருந்தது.




கிழவர் அன்று தனது பறுவ விரத காரியங்களை முடித்துக்கொண்டு, சற்றுத்தாமதமாகவே கோவிலடிக்கு வந்தார். விரதச்சாப்பாடு, காய்கறிகளும் பிரமாதம். தாழித மணம் மூக்கைத் துளைத்தது. நான்கு பார்சல்களைக் கையில் கொண்டு வாடிக்கையாளர்களைத் தேடினார். அவர்கள் அனைவரும் ஏற்கனவே உண்டு பசி தீர்த்ததும் அல்லாது மேலுஞ் சில பொதிகளுக்கு உடமையாளராகவும் இருக்கக்கண்டார். வேறு வேறு இடங்களில் எல்லாம் பிச்சைக்காரர்களைத்தேடி மூன்று பொதிகளைத் திணித்து விட்டார். மிகுதி ஒன்று மட்டும் கையில். வேப்பமரத்தடியில் இருந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் புதியவர் மேல் கிழவரின் திருஷ்டி பட்டது. இவன் பிச்சைக் காரனா? இருக்காது.கட்டுமஸ்தான உடல் வாகோடு,எதுவித அவயவக் குறைபாடுமற்ற இவன் பிச்சைக் காரனாக முடியாது, எனத் தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவன் மீது பதிந்திருந்த தன் பார்வையை மறு பக்கம் திருப்பினார். அதே நேரத்தில் புதியவனின் கரங்கள் தன்னை நோக்கி நீள்வதையும் அவர் அவதானிக்கத் தவறவில்லை.ஏற்பது இகழ்ச்சி என்று தயங்கித்தயங்கி நீண்டது போலும் அந்தக் கை.பாத்திரமறிந்து பிச்சை இடுங் கிழவர், நீட்டிய கரத்துக்குரியவரைப்பார்த்தார். அவனுடைய பசியையும் தவிப்பையும் விஞ்சிய மானஉணர்வை அவரால் கிரகிக்க முடியவில்லை. ஏழனமாக ''இந்த உடம்பை வைத்துக் கொண்டே பிச்சை எடுக்கிறாயா'' என்று கொண்டே பார்சலை நீட்டினார்.

புதியவனின் நீட்டிய கை மடங்கி விட்டது. முகம் நிலத்தை நோக்கத் தலை வேண்டாம் என்ற சைகையைச் செய்தது. கிழவன் அவமானத்தால் நடுங்கிப்போனார். சோற்றுப் பொதியை அவனுக்கு முன்னே வைத்துவிட்டு வெறித்தே பார்த்துக் கொண்டு நின்றார்.எங்கிருந்தோ ஓடி வந்த நாயொன்று அப்பார்சலைக் கௌவி இழுத்தது. ''அடிநாயே'' என்று கிழவர் நாயைத் துரத்த,நாய் ஓடிய பாதை நீளச் சோறு சிதறிக் கிடந்தது. அடுத்தவனின் தவிப்பை உணராது சொல்லால் வடுப்படுத்தியதை நினைத்து வருத்தத்துடன் கோவிலில் நுழைந்தார் கிழவர்.

தில்லைச்சிவன்

மறு நாள் அதிகாலைப் பூசைக்கு வந்து மீண்ட சிலர் வீதியோரத்தில் கிடந்த ஒரு மனிதனைக்கண்டனர். அவனது உயிர் உள்ளும் புறமுமாக ஊசலாடிக் கொண்டிருந்த வேளை அது. பார்த்தவர் பலரும் ''ஐயோ பாவம்'' என்றார்களே தவிர அவனுக்கு எந்தவகையிலும் உதவியதாக வில்லை.நமக்கேன் இந்த வீண்வம்பு என்று கருதியிருக்க வேண்டும். ஆனால இவர்களின் வாய் மூலம் பரவிய செய்தி காவற்றுறை வரை எட்டியது.

காவற்றுறையினர் வந்து பார்த்து உயிரற்ற உடலை வைத்தியசாலையிற் சேர்த்தனர். வைத்தியசாலைப் பரிசோதனையால் பட்டினிச்சாவு என்று கேள்விப்பட்ட கிழவர் பதறிப் போனார். உயிர் ஒன்றைப் பாதுகாக்கத்தனக்குக் கிடைத்த ஒரேயொரு சந்தர்ப்பத்தை, வெறும் வாய்ச் சொல் லால் இழந்து விட்ட மீளாத்துயர் அவருக்கு பசித்தவனுக்கே பார்சல் கொடு என்றது அவரின் மனம். ★

# கோணப்புலம் நலனோம்பு நிலையத்தில் எந்தவித அடிப்படை வசதிகளுமில்லை

**பள்ளி செல்லும் பராயத்தினர்; கூலி வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றும் அவலம்**

(மல்லாகம்)

மல்லாகம்பகுதியில் உள்ள கோணபபுலம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள், எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் அல்லலுற்று வருகின்றனர்.

வலிவடக்கில் உள்ள மயிலிட்டி, தையிட்டி, ஆகிய இடங்களைச் சேர்ந்த 59 குடும்பங்களைச் சேர்ந்த 227 பேர் ,1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் பல்வேறு இடர்களுக்கும் மத்தியில். இங்கு வாழ்ந்து வந்த நிலையில் இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் வசித்து வந்த38 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் கடந்த வருடம் முதல் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் 59 குடும்பங்களின் பாவனைக்கே போதுமானதாகக் காணப் படாத இந்த நலன்புரிநிலையத்தில் தற்போது 97 குடும்பங்கள் மிகுந்த இடநெருக்கடிக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றன.

வன்னியில் இருந்து வந்து இங்கு தங்கியுள்ளவர்களில் 25 குடும்பங்களுக்கு மாத்திரமே இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டதால் ஏனைய 13 குடும்பங்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

தவிரவும்,இங்கு வசிக்கின்ற 354 பேரின் பாவனைக்கு 8 மலசலகூடங்களே உள்ளதால், மலசலகூடக் குழிகள் நிரம்பிய நிலையில் அங்கு சுகாதாரச் சீர்கேடுகளும் தொற்று நோய் ஆபாயமும் மலிந்து காணப் படுகின்றது.

அத்துடன், இவர்களது பாவனைக் குள்ள ஒரேயொரு கிணறும் அடிக்கடி வற்றிவிடுகின்ற நிலையில் குடி நீரும் இங்கு கேள்விக்குறியாகி வருகின்றது.

இதேவேளை, இங்கு பாடசாலை செல்லும் பருவத்தினர் 80 பேர் காணப்படுகின்ற போதிலும் இவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான எந்தவொரு ஏதுநிலையும் இங்கு இல்லை. படிப்பில் ஆர்வமுள்ள சிறுவர்கள் பலரும்,குடும்பநிலை காரணமாக தமது கல்விக்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டு கூலி வேலைக்குச் சென்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-86)

# கைவிடப்பட்ட காவலரணில் கடற்படையினர் கடமை

(மண்கும்பான்)

மண்கும்பான் பகுதியில் கைவிடப்பட்ட காவலரண்கள் புனரமைக்கப்பட்டு திரும்பவும் கடற்படையினர் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின் கைவிடப்பட்டிருந்த கறுப்பாச்சி அம்மன் ஆலயப்பகுதிக் காவலரண்,4ஆம் கட்டைக் காவலரண் ஆகியவையே தற்போது புனரமைககப்பட்டுள்ளன.

இதேவேளை இப்பகுதியில் பஸ்ஸிற்காகக் காத்து நிற்கும் மக்கள் இதனால் பெரும் சிரமம் அடைவதாகவும தனித்து பஸ்ஸிற்காகக் காத்து நிற்கமுடியாது பெண்கள் கஷ்டம் அடைவதாகவும கூறப்படுகின்றது.

(உ-56)

# திலீபன் ஞாபகார்த்த கல்வி நிலையம

(பளை)

தியாகதீபம் திலீபன் நினைவாக முல்லைத்தீவு உடுப்புக்குளம் உப்புமாவெளி கிராமத்தில் கல்வி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் வசித்து வரும் தரம்1முதல் 11 வரையான மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் வகையில் இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-97)

# செய்தித் துளிகள்

## திறப்பு விழா

(மந்துவில்)

மந்துவில் றோ.க.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதானவாயில் கேற்றைக் கடந்த திங்களன்று யாழ.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இதற்கான நிதியையும் இவரே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-54)

## உலர் உணவு

(பளை)

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் துணுக்காய் மற்றும் மல்லாவி பிரதேசத்தில் உள்ள 72சுகாதாரத் தொண்டர்களுக்கு இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. (உ-97)

## அஞ்சல்தின கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 9ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.00மணிக்கு நயினாதீவு அஞ்சல் அதிபர் நா.க.குமாரசூரியர் தலைமையில் நயினாதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் மற்றும் அஞ்சல் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சுந் [illegible] துரைகளை வழங்கவுள்ளனர். (உ-18)

## முதியோர் தினம்

(வடலியடைப்பு)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முதியோர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி மற்றும் முதியோர்களிடையே நடாத்தப்பட்ட நடைப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். (உ-21)

## பொலிஸாரின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் யாழ். பொலிஸார் கருத்தரங்கு ஒன்றினை நடாத்தினர்.

யாழ்ப்பாணம் சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில், பிற்பகல் 4.00 மணியளவில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெரல்ட் அன்ரனியின் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகியது.

நிகழ்வில் காங்கேசன்துறைப் பொலிஸ் மகளிர் பிரிவுப் பொறுப்பதிகாரி நாலிக்க சில்வா, யாழ். பொலிஸ் அதிகாரி ஹெட தர்மசிறி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (இ-34)

## மார்புநோய் கிளினிக்

(மருதங்கேணி)

புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் மாவட்ட வைத்தியசாலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து வைத்தியர் ஒருவர் வருகைதந்து சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளதால், ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமைகளில் மார்புநோய் கிளினிக் நடைபெறவுள்ளது. (உ-35)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யா/சன்மார்க்க மகா வித்தியாலய வாணிவிழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் து.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருக்கரசு கலந்துகொள்ளவுள் (உ)

## பதிவுச்சான்றிதழை பெறஅறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் நெல் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தமிழீழ வருவாய்ப் பகுதியின் தொழில் பதிவுச்சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டுமென தமிழீழ வருவாய்ப் பகுதி அறிவித்துள்ளது.

அதேவேளை, நெல் கொள்வனவு செய்வோருககு கொள்வனவுச் சிட்டை அவசியம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (த-43)

## தங்கப்பதக்கம் வென்றனர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபையினால் நவராத்திரியை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பிரிவு ரீதியாக வெற்றிபெற்று தங்கப்பதக்கம் வென்றோர் பெயர் விபரங்கள் வருமாறு:

கீழ்ப்பிரிவு: பா.வர்ஜினி (இணுவில் மத்திய கல்லூரி).

மத்திய பிரிவு: பூ.திருமாறன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

மேற்பிரிவு: ஆ.அனுசுயா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி). (உ-05)

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க[illegible] ஏற்பாட்டில் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் 'சர்வதேச ஆசிரியர்தினம்' கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம், கடந்த வருடம ஆசிரியர்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கும், இவ்வருடம் ஆசிரியர்களுககிடையில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்தார். (உ-10)

* * *

(இணுவில்)

உலக ஆசிரியா தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அன்றைய தினம் மு.ப.10.00 மணிக்கு ஆசிரியர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கும் தொடர்ந்து ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (உ-10)

* * *

(தாவடி)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் ஒன்றிணைந்து, வித்தியாலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஆசிரியர் தின விழாவை பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் க.சுரேந்திரன் தலைமையில் நடாத்தவுள்ளன. (உ-117)

## ஜப்பான் வங்கி கடனுதவி

(மருதங்கேணி)

வட-கிழக்கு மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 819 மில்லியன் ரூபாவை ஜப்பானிய வங்கியான "ஜெபிக்" கடனுதவியாக வழங்கியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைபபின் ஊடாக செயற்படவுள்ள இத்திட்டத்திற்கு 889 மில்லியன் தேவைப் படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான உடன்படிக்கை இவ்வருடம் மார்ச் மாதம் அரசாங்கத்திற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## சுயதொழில் முயற்சிக்கடன்

(மருதங்கேணி)

முள்ளியவளைப் பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உழைப்பாளிகளை. இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 10 பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக கடனுதவி வழங்கப்பட்டது.

மேறபடி கடன் வழங்கல் நிகழ்வு முள்ளியவளைப் பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்தவாரம் பிரதேச பெண்கள அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் செல்வி கோ.கலாமலர் தலைமையில் நடைபெற்றது. (உ-35)

## தொடர்பு கொள்க!

(யாழ்ப்பாணம்)

கழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

* திருமதி நடராஜா புவனேஸ்வரி- மாதகல்துறை, மாதகல்.

* திருமதி தவராஜசிங்கம் சுகிர்தாதேவி-விபுலானந்த வீதி, வாழைச்சேனை.

* திருமதி ஷைலா சேனாதிராஜா- (றோயல் ரெஸ்ட் லொட்ஜ்-கொழும்பு), யாழ்ப்பாணம்.

* திருமதி ரவிந்திரராஜா தவமணிதேவி-வட்டுவல் பாலம், முல்லைத்தீவு.

* பழனியாண்டி பாலேஸ்வரன்- வல்வெட்டித்துறை.

* திருமதி சந்திரன் செல்வராணி- ஊரெழு, சுன்னாகம்.

* திருமதி அன்ரனி தேவமாலா- திருக்குடும்ப மாதா கோவிலடி, சுன்னாகம். (உ)

## தப்பிச்செல்லமுயன்ற சந்தேக நபருக்கு காலில் சூடு

(கொழும்பு)

சிறைச்சாலைக்குச் சொந்தமான பஸ்வண்டியில் இருந்து தப்பிசசெல்ல முயன்ற சந்தேக நபர்மீது சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மேற்படி சந்தேகநபர் காலில் படுகாயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் உட்பட 18குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்பட்ட மேற்படி நபரை, நேற்று முன்தினம் யாஎல கணதன சுற்றுலாத்துறை நீதிமன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்ட சமயமே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. (உ-61,10)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாடட லீக் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டியில், நாளை சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு பல்கலைக்கழக அணி எதிர் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும்,

5.15மணிக்கு சென் மேரிஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் பொற்பதி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (உ-10)

## காத்தான்குடியில் டெங்கு பரவுகிறது

(கொழும்பு)

காத்தான்குடிப் பிரதேசத்தில் கடந்த 4 தினங்களுக்குள் இருவர் டெங்குக் காய்ச்சலால் மரணமடைந்துள்ளனர் என அப்பிரதேசத்தின் மருத் துவ சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை 60 வயதுடைய மூதாட்டி ஒருவரும் 7வயது மாணவன் ஒருவனும் டெங்கினால் மரணமாகியுள்ளனர்.

இதேசமயம்,பாடசாலை மாணவி உட்பட இருபெண்கள் மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (உ-61,8)

# இருபாலை புனரமைப்புக்கு ரவிராஜ் எம்.பி. நிதியுதவி

(இருபாலை)

இருபாலையில் உள்ள கந்தவேள் பாடசாலை மற்றும் அங்குள்ள 30 வீடுகளைக்கொண்ட குடியேற்றத்திட்டம், சேதமடைந்துள்ள வீதி என்பவற்றைப் புனரமைப்பதற்கு முதல் கட்டமாக 5லட்சம் ரூபா நிதியை வழங்குவதாக யாழ.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் உறுதியளித்துள்ளார்.

இருபாலையில் உள்ள அன்னை இந்திரா சனசமூக நிலையத்தின் அழைப்பின் பேரில் கடந்த 29ஆம் திகதி இப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்ட போதே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மிகுதித் தொகையினை தேவைக்கு ஏற்ப பின்னர் வழங்குவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-84)

# 20 வருடப் போரினால் வட-கிழக்கு மாகாணத்தில் 9 இலட்சம் சிறார்கள் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த இரு தசாப்த காலமாக இடமபெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக 9 இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இவ்விடயங்கள் தெரியவந்துள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களால் 3 இலட்சத்து 80 ஆயிரம் சிறுவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிவாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

அநாதைகளாக்கப்பட்ட அல்லது பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் மேலும் 7 ஆயிரம் சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் தங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது 157 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் 34 சிறுவர் நிலையங்கள் இயங்கி வருகின்றன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-61,8)

# ஒழுக்கச் சீர்கேடுகளை மாணவர்கள் தவிர்க்க வேண்டும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் தற்போது காணப்படும் ஒழுக்கச் சீர்கேடுகளைத் தவிர்க்க வேண்டிய பொறுப்பு மாணவர்களுக்கே உண்டு என யாழ்.வல



யக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக்கிளையின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் நடைபெற்ற மாணவர் தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இப் பயிற்சி நெறியில் மாணவர்கள் முழுமையாகப் பங்குபற்ற வேண்டும். திணைக்களங்களும் தேசிய சர்வதேச நிறுவனங்களும் இணைந்து வழங்குகின்ற இப் பயிற்சியின் முக்கிய நோக்கம் நேரான விழுமியங்களை மாணவர் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்பதே.

இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் நல்லதோர் சமூகத்தை உருவாக்கப் பாடுபடவேண்டும். இவ்வகையில் மக்கள் வங்கியின் சேவை பாராட்டத்தக்கது.

மக்கள் வங்கி உலக நடைமுறைகளை ஒத்த புதிய சிந்தனையுடன் செயற்பட்டு வருகின்றது.

இன்று ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வங்கிகளின் மூலம வழங்கப்படவுள்ளவாறு இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடு மாணவரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்குமாப்போல் உள்ளன என்றார்.

யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் தலைமையில இடம்பெற்ற இந்த நிகழ்வில் துறை சார்ந்த பலரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். (உ-07)

# இளைஞர்களின் முயற்சியால் சங்கிலித் திருட்டு முறியடிப்பு

(தாவடி)

பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைககிளில் தப்பியோடிய திருடனைத் துரத்திச் சென்று சங்கிலியை மீட்டு உரியவரிடம் கொடுத்தனர் முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள்.

திருநெல்வேலி பணிக்கர் ஒழுங்கையில் நேற்று முன்தினம் பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நயினாதீவைச் சேர்ந்த திருமதி தை.கதிரேசு என்பவர் திருநெல்வேலி சந்தைக்குச் சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளை, பின்னால் வந்த திருடர் இவரது சங்கிலியை அறுக்க முற்பட்டவேளை, சம்பந் தப்பட்ட பெண் கூக்குரல் இடவே கையில் அகப்பட்ட சங்கிலியின் ஒரு பகுதியுடன் மோட்டார் சைக்கிளில் தப்ப முயன்றான்.

இதைஅறிந்து அவ்விடம் விரைந்து வந்த இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் திருடனைத் துரத்திச் சென்றபோது களவாடிச் சென்ற சங்கிலியின் பகுதியை திருடன் வீசி விட்டு ஓடித்தப்பியுள்ளான்.

இதைமீட்டெடுத்த இளைஞர் கள் அதை உரியவரிடம் ஒப்படைத்தனர். (உ-117)

# ஸ்ரீ.சு.க.வுடன் கூட்டுச் சேருவதை கட்சிகள் சில விரும்பவில்லை

## ஜே.வி.பி. பிரசாரச் செயலர் ஆட்சேபம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி அடைந்துள்ள நிலையில், கூட்ட மைபபுக் குறித்த பேச்சை மீள ஆரம பிப்பது குறித்து தமக்கு உத்தி யோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப் படவில்லை என ஜே.வி.பியின் பிர சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முறையாக எமக்கு அழைப்பு விடுத் தால், கட்சியின் அரசியல் பீடம் கூடி அது தொடர்பாகத் தீர்மானிக் கும்.

அவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எமது கட்சிக்கும் இடை யில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக் கப்பட்டால் அதுபற்றி வெளிப்படை யாக அறிவிக்கப்படும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியுடன் நாம் கூட்டுச் சேருவதை விரும்பாத சில கட்சிகள், இருகட்சிகளிடையேயும் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டுவரு கின் றன என்று விமல் வீரவன்ச மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (உ-60,10)



# முதியவர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும்

## சமூக நலன்புரி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

முதியோர்களுக்கு நிவாரணங் களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக நலன்புரி அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரி வித்துள்ளார்.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு,நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்ற வைபமொன றில் கலந்துகொண்டு உரையாற றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப பணிப்புக்களை மேற்கொண்ட முதி யவர்கள் தமது வாழ்க்கையில் எஞ் சிய கட்டத்தை மகிழ்ச்சியுடன் கழிக்க வேண்டும் என்பதே அரசின் விருப் பமாகும்.

முதியவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கவும், மற் றும் சுகாதார போக்குவரத்துத் துறைகளிலும், தபால் வங்கி நட வடிக்கைகளிலும் முதியவர்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர்களுக்கு பிரத்தி யோக அடையாள அட்டைகள் வழங் கப்பட்டு வருகின்றன.

முதியோர் நலன் கருதி பகல் நேர பராமரிப்பு நிலையங்களை ஆரம் பிக்கவும் அரசு திட்டமிட் டுள்ளது என்றார். (உ-60,10)

# உடுவில் கல்விக்கோட்ட பாஓதல் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

உடுவில் கல்விக்கோட்டப் பாட சாலைகளுக்கிடையில் நடைபெற்ற சகலகலாவல்லி மாலை பா ஓதல் போட்டி முடிவுகள் வெளியாகியுள் ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

**பிரிவு - I (ஆண்)**

முதலாம் இடம் - கோ.ரகுவரன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல் லூரி.

இரண்டாம் இடம் - லோ.பிரண வன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

மூன்றாம் இடம் - பா.கஜன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**பிரிவு - I (பெண்)**

முதலாம் இடம் - சி.திவ்யா - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

இரண்டாம் இடம் - கோ. ஹம் சத்வனி - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

மூன்றாம் இடம் - து.துஷ்யந் தினி - இராமநாதன் கல்லூரி.

**பிரிவு - II (ஆண்)**

முதலாம் இடம் - சு.ஸ்ரீவரன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

இரண்டாம் இடம் - சு.கபிலன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல் லூரி.

மூன்றாம் இடம் - கு.நிர்மலன் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல் லூரி.

**பிரிவு - II (பெண்)**

முதலாம் இடம் - ப.சாந்தினி - இராமநாதன் கல்லூரி.

இரண்டாம் இடம் - ஜெ.ஜெயப் பிரியா - இராமநாதன் கல்லூரி.

மூன்றாம் இடம் - ம.பிரிந்தா- யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

(உ-103)

# சண்டிலிப்பாய்க் கோட்ட பாஓதல் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட் டப் பாடசாலைகளிடையே நடை பெற்ற சகலகலாவல்லி மாலை பா ஓதல் போட்டி முடிவுகள் வருமாறு:

**பிரிவு - I (ஆண்)**

முதலாம் இடம் - ஜெ.ரஜீவன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் - யோ.மாத வன் - சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

மூன்றாம் இடம் - யோ.மதுரன் - சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

**பிரிவு - II (ஆண்)**

முதலாம் இடம் - பே.அஜந்தன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் - த.சண்முகப் பிரியன் - மானிப்பாய் இந்துக் கல் லூரி.

மூன்றாம் இடம் - க.ரவிக்காந் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**பிரிவு - I (பெண்)**

முதலாம் இடம் - கி.வாசுகி - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம் - ஜெ.வைஷ் ணவி - மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை.

மூன்றாம் இடம் - ஸ்ரீ.துளசி - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**பிரிவு - II (பெண்)**

முதலாம் இடம் - த.நிஷா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம் - க.சிந்துஜா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம் - கோ.கோகு லப்பிரியா - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி. (உ-103)

# பொது இடங்களில் பொலித்தீன் பாவனைக்கு விரைவில் தடை

(மருதங்கேணி)

நாட்டிலுள்ள அரச கட்டடங்கள், வணக்கஸ் தலங்கள்,தேசிய பூங் காக்கள்,விளையாட்டுமைதானங் கள் போன்றவற்றில் பொலித்தீன் அலங்காரங்களை மேற்கொள் வதை தடைசெய்வதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தடையை அமுல் படுத்து வதற்காக சட்டம் ஒன்று தயாரிக்கப் படவுள்ளதுடன்,இச்சட்டத்தை விரை வில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றவும் அரசு திட்டமிட்டு இருப்ப தாகவும் தெரியவருகிறது.

அதேபோல் பொலித்தீன் இறக்கு மதியை கட்டுப்படுத்துவதற்கு அர சாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பொலித்தீன் உற்பத்திக்காக கொண்டுவரப்படும் மூலப் பொருட்க ளுக்கு 1. 5 வீத வரியை அறவிட உத் தேசித்து இருப்பதன் மூலம் சுமார் 100முதல் 150 மில்லியன் ரூபா வரு மானமாகக் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.இந்தநிதி சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்காக செலவிடப்படவுள்ளது. (உ-35)

# மாட்டிறைச்சி கடத்தியவர் விடுதலைப்புலிகளிடம் சிக்கினார்

(மண்கும்பான்)

மண்கும்பானில் இருந்து யாழ் நகருக்கு சட்டவிரோதமாக மாட்டி றைச்சி கடத்த முற்பட்ட நபர்,விடு தலைப்புலிகளிடம் வசமாகச் சிக்கி னார்.

நேற்று முன்தினம் சிறிய ரக லொறியொன்றில் இரு மாடுகளை யும் பெருமளவு இறைச்சியையும் களவாக யாழ்நகர் நோக்கி ஏற்றி வந்த சமயமே, மேற்படி நபர் 3ஆம் கட்டைப் பகுதியில் விடுதலைப்புலி களிடம் அகப்பட்டார்.

மாடுகளையும் இறைச்சியையும் பறிமுதல் செய்த பொலிஸார் சம்பந்தப்பட்ட நபரை எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

(உ-56)

# நவராத்திரி பாமாலை

## எட்டாம் நாள்



### போற்றிடுவோம் பாடசாலையில்

வெண்டாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதித் தாயே
விண்ணவர்கள் போற்றிடும் நான்முகனின் நாயகியே
எண்ணும் எழுத்தும் ஏற்றிடும் எங்கள் மாதாவே
பண்ணிசையால் போற்றிடுவோம் பாடசாலையில் நாமே

இ.குமரன்
*யாழ். இந்துக் கல்லூரி.*

### வித்தகராய் எமையாக்கு

கலைகளின் திருவுருவே
நிலையான கலையெல்லாம்
கற்றுநாம் உயர்ந்திடவே
கருணையில் எமைப்பாராய்

சிலையாக நிற்கின்றாய்
சித்திரமாய் நிற்கின்றாய்
விலையிலா கல்வியிலே
வித்தகராய் எமையாக்கு

இ.சுஜித்தா
*வேம்படி மகளிர் கல்லூரி.*

### சக்தியாக வரவேண்டும்!

வேண்டிடும் அருளால் தாயே - எம்
வாழ்வு சிறந்தோங்கிட வேண்டும்!
வெண்டாமரையில் வீற்றிருந்து தாயே - எம்
வினைகளையே விலக்கிட வேண்டும்!
விண்ணோடு முகிலாக தாயே - நீயிருந்து
வித்தாக ஒளிதரவேண்டும்!
மண்ணாளும் மானிடத்திற்கே தாயே - நீ
மாபெரும் சக்தியாக வரவேண்டும்!

என்.ஷோபிகா
*யா/இ.ம. கல்லூரி.*

### உன்னைப் போற்றி வணங்குவோமே

கலைகள் எல்லாம் அள்ளித் தருபவளே
கல்விச் செல்வத்தை வழங்குபவளே
படைத்தல் கடவுளின் துணைவியே
பயம் அனைத்தையும் ஒழிப்பவளே
கலைமகளே நவமித்தாயே
கடைசி மூன்றுதினம் - அம்மா
உன்னைப் போற்றி வணங்குவோமே....

செ.ஐங்கரன்
*யா/ பரியோவான் கல்லூரி*

### வணங்குவமே

வெண்டாமரையில் வீற்றிருப்பாய்
வீணை கரத்தில் வைத்திருப்பாய்
உண்டால் சுவைக்கும் பழமெல்லாம்
உவப்பாய்ப் படைத்து வணங்குவனே

செ.அச்சுதன்
*யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.*

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிந்து, அண்மையில் நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று,. நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கல். மற்றும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படும் என சங்கத்தின்பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிவித்துள்ளார். (இ-10)

## இலவச சத்துணவு திட்டம்

(வடலியடைப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சாவல்கட்டு கிராமத்திலுள்ள 4முன பள்ளிகளுக்கு கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலவச போசாக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கிராமத்திலுள்ள முன் பள்ளிச் சிறார்களின் போசாக்கு மட்டம் மிகவும் குறைவடைந்துள்ளதாகவும், அவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டியதையடுத்தே இவ் இலவச_சத்துணவு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-21)

## சிறுவர் பூங்காக்கள்

(கொழும்பு)

சிறுவர் தினத்தையொட்டி சிறுவர் பூங்காக்களை அமைக்க சமுத்திரவள அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், கடற்றொழில் சமுத்திரவள பிரதி அமைசசர் என்.பி.மொகிதீன் அப்துல் காதரினால் கோரளைப்பற்று, கோரளை மேற்கு,கோரளை மத்தி ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளில் சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக கோரளை மத்தி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அஸ்கர் வித்தியாலயத்தில் மைதானம் அமைக்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-61,8)

## குளம் புனரமைப்பில்லை விவசாயிகள் கவலை

(வடலியடைப்பு)

மானிப்பாய் மேற்கிலுள்ள கிராய் குளம் பல வருடங்களாகப் புனரமைபபுச் செய்யப்படாமல் அழிவடைந்த நிலையில் உள்ளது.

இதனால்,மழைகாலத்தில் மழை நீர் தேங்கி இக்குளம் உடைப்பெடுககும் நிலை உள்ளதால் அப்பகுதி விவசாயிகள் தமது பயிர்கள் அழிவுறும் அபாயம் இருப்பதாகக் கவலை தெரிவித்துள்ளனர். (உ-21)

## இலங்கை வங்கியில் வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் இன்று காலை 8மணிக்கு வாணி விழா நடைபெறவுள்ளது.

பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ''சக்தி வழிபாடும் நாமும்'' என்ற தொனிப் பொருளில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (10)

# தீய பழக்கங்களைக் கை விட்டு நல்லொழுக்க சீலர்களாய் வாழ்வோம்

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் என்பார்கள். இதே போல் மனிதன் வாழவேண்டுமாயின் சில தீய பழக்கவழக்கங்களைக கைவிட வேண்டும். அந்தவகையில் மனிதனாகப்பட்டவன் போதைதரும் வஸ்துகளையும் புகைத்தலையும் கைவிட்டு நல்லொழுக்கம் உள்ளவனாக வாழவேண்டும்.

நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருளல்ல. நாம் சிறுவயது தொடக்கம் நல்லொழுக்கத்தைப் பேணிவர வேண்டும். ஒருவன் நல்லொழுக்கத்தைப் பேணிவருவானாயின் கண்டிப்பாக போதைப் பொருட்களையும், புகைத்தலையும் நாடமாட்டான்.

நமது நாட்டில் தற்பொழுது நல்லொழுக்கம் என்பது குதிரைக் கொம்பாகப் போய்விட்டது. பத்திரிகைகளைப் பார்க்கும் போது,வயதுக கட்டுப்பாடின்றிக் கற்பழித்தல், சமூகச் சீரழிவுகள், சண்டைகள், பிள்ளைகளைத் தந்தை வெட்டிக் கொல்வது,மனைவியை அடிப்பது- அதனால் மனைவி தூக்கில் தொங்குவது போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாக எமது சமூகத்தில் நடைபெறுவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

மதுவை எடுத்துக்கொண்டால் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவரின் குறள்தான் ஞாபகத்திற்கு வரும்.``கள்ளுண்டான் நஞ்சுண்டார்'' என்பது ``உலக மக்களிடையே செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. குடி, குடியைக கெடுக்கும். மது என்பது உலக மக்களிடையே நாகரிகப் பாணமாக மாறியுள்ளது. அதேவேளை,எமது நாட்டைப்பொறுத்தமட்டில் ஒருவனுடன் சண்டைபிடிக்கவேண்டுமாயின் மனைவியுடன் சண்டை பிடிக்க வேண்டும் என்றால் கூடுதலாக மதுவை நாடுவார்களாம். இதனால் ஏற்படும் தீமைகளை அவன் உணர்வது இல்லை.


மது அருந்துபவன் தேகாரோக்கியமாக ஒருபொழுதும் வாழமாட்டான்.அதற்கு பதிலாக மனைவி,பிள்ளைகளை,உற்றார்,உறவினர்களை, ஏன் இந்த நாட்டை விட்டு முதல் பஸ்ஸில் ஏறிப்பயணமாவான். இப்படி ஒரு நிலை குடும்பத்தலைவனுக்கு ஏற்படுமாயின் அவன் விட்டுச் சென்ற குடும்பம் அவனது பிள்ளைகள் சீரழிந்து போகும்.எனவே,இந்த சீரழிவு வேண்டுமாஎன்று மதுஅருந்துபவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்

மது அருந்துவதால் உலகில் ஒருவருடத்தில்,ஒரு கோடிமக்கள் மரணிக்கின்றார்கள். போதைப் பொருளால் 25 வயது தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்தான் பாதிப்படைகின்றார்கள். எனவே இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் கட்டுமட்டாக வாழப்பழகினால் மதுவில் இருந்து விலகிக் கொள்ளலாம். மேலும்,

**மது அருந்துவதால் , ஆண் களில் 25 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையும் பெண்களில் 5 சதவீதம் முதல் 8சதவீதம் வரையும் வைத்தியசாலைகளல் அனுமதிக்கப்படுகின்றார்கள**

என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

மனிதன் அருந்தும் மதுவில் 10 சதவீதம் சுவாசித்தல் மூலமும், சிறுநீர் மூலமும்,வியர்வை மூலமும் வெளியேறுகின்றன. மிகுதி 90 சதவீதமும் மது அருந்தி 1 1/2மணித்தியாலத்தில் இரத்தத்தில் சங்கமமாகின்றது.இதனால் மனிதனின் சிறுநீரகம், இரைப்பை, நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்படுகின்றன. மறதி ஏற்படுகின்றது. இதனால் புலன் பறிக்கப்பட்டு, நலன் பறிக்கப்பட்டு, நோயை வளர்த்து,ஈற்றில் உயிரைக் குடிக்கும். எனவே இந்த வாழ்க்கை எமக்கு வேண்டுமா? என்று மது அருந்துபவர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்தால் மதுவை ஒழித்து நல்ல




தொரு சமுதாயத்தை நாட்டில் அமைக்க முடியும்.

அடுத்து புகைத்தல்-புகைத்தலை விட்டால் செல்வம்,சிறப்பு, சுகம் உண்டாகும் என்று முதியோர் கூறுவார்கள். புகைப்பவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.நீ விடும் புகை, உன்னையும்,உன் அயலவர்களையும் அல்லவா நோயாளி ஆக்குகின்றது. இன்பம் என்று புகைப்பவர்களும், இதம் என்று புகைப்பவர்களும், கவலையை மறக்கப் புகைப்பவர்களும் வெகுவிரைவில் உயிரை மாய்ப்பதற்கு ஒழிய வாழ்வதற்கு அல்ல. ஒரு நாளைக்கு 10 சிகரட் புகைப்பவன் ஒருவன் நாளொன்று 11 நிமிடத்தை தனது ஆயுளில் இருந்து குறைத்துக் கொள்கிறான். புகைப்பவர் ஒருவருக்கு பிறக்கும் குழந்தைக்கு 40 சதவீதம் புறறுநோய வர வாய்ப்புண்டு என்று **புள்ளிவிபரம் கூறுகின்றது. மேலும் புகைப் பதால் வருடம் தோறும் உலகில் 40 இலட்சம் பேர் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றார்கள்.**

இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப்பழக்கம் உடையவர்கள். ஒருவன் புகைக்கும் போது 25 சதவீதம் புகையை உள்வாங்குகின்றான். 75 சதவீதம் வெளியே விடுகின்றான். இதனால் புகைப்பவனுக்கு பக்கத்தில் உள்ளவனுக்குப பாதிப்பு கூடுதலாகவுள்ளது. எனவே நாம் புகைப்பவனுக்குப் பக்கத்தில் நிறபதைக்கூடத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் உலகம் முழுவதும் 93 கோடி மக் கள் புகைத்தலால் உயிர் இழக்கும் அபாயத்தில் உள்ளார்கள்.

எனவே,மேற்காட்டப்பட்ட போதை வஸ்து,புகைத்தல் ஆகியவற்றைக் கைவிட்டால் தேகாரோக்கித்துடன். நலத்துடனும், வாழமுடியும்.ஆகவே, நல்லொழுக்கத்தினமான இன்றில் இருந்து தீய பழக்க முடையவர்கள் அவற்றைக் கைவிட்டு நல்லொரு சமுதாயத்தை உருவாக்க வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம். ★

# போதிய அதிகாரமிக்க இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவதே பொருத்தமானது

## யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தேசிய தலைவர் பிரபாகரனுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

போதிய அதிகாரங்களுடனான இடைக்கால நிர்வாகம், தாமதமின்றி புலிகளிடம் வழங்கப்படுவதையே நாம் வலியுறுத்திநிற்கின்றோம் என்று தலைப்பிட்டு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தமிழழத் தேசியத்தலைவர்வே. பிரபாகரனுக்கு 28 ஆம் திகதியிட்ட மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

இந்த அழகிய தீவில் நீடித்த நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். இங்குஉள்ள தமிழ் மக்கள், சிங்கள மக்களை போன்ற சம அந்தஸ்த்தும் சம வாய்ப்புக்களைக் கொண்டு சுதந்திரமும் கௌரவமுமிக்க வாழ்க்கை முறையை மேற்கொள்வதற்கான அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக வாழவும் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தில் போர் நெருக்கடியை முழுமையாகத்தணித்து இயல்பு நிலையை தோற்றுவித்து சீரழிந்த தேசத்தை கட்டியெழுப்பக் கூடிய நிலைமையை இடைக்கால நிர்வாக சபை ஒன்றின் மூலமே பெறறுக் கொள்ள முடியுமென்பதில் எமது மக்கள் மிகவும் உறுதியாக உள்ளார்கள்.

உலகில் மிக மோசமான உள்நாட்டுப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நிரந்தர தீர்வு ஒன்று எட்டப்படும்வரை அந்த நாடுகளில் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுவந்த அமைப்புக்களிடம் இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்பட்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும் வடக்கு-கிழக்கில் போரினால் ஏற்படுத்தப்பட்ட துன்பகரமான சூழ்நிலைகள் பொது மக்களுக்கு சொல்லெணாத்துயரங்களை தொடர்ந்தும் ஏற்படுத்துகின்றன. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் படுமோசமான சூழ்நிலைகளின் கீழ் இனனும் அகதிமுகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருக்கின்றனர். சேதமடைந்த அல்லது அழிந்த தமது வீடுகளுக்குத் திரும்பியவர்கள் உரிய தங்குமிடமின்றி கஷடமான நிலையை எதிர் நோக்குகின்றனர். சமூகப் பொருளாதார கட்டமைப்புக்களை போர் திட்டமிட்டு அழித்திருக்கின்றது.

வளம் மிக்க விவசாய நிலங்கள் கண்ணிவெடி களின் பூமியாகவும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாகவுமமாற றப்பட்டுள்ளன. இன்றும் மக்கள் குடியிருப்பின் 30 வீத நிலப்பரப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. யுத்தமும் கடந்த அரசாங்கத்தினால் எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார தடைகளும் விவசாயத்தையும் மீன் பிடி தொழிலையும் பெருமளவு நாசமாக்கிவிட்டன. இந்த கொடூர யுத்தத்தால் உண்மையில் பாதிக் கப்பட்டோர் வட கிழக்கு மக்களே. எனவே அவர்கள் அவசரமானதும் அவசியமானதுமான உதவிகளுக்கு தகுதியானவர்கள் ஆவார்.

மேசாமான பொருளாதார சூழ்நிலையை எதிர் நோக்கியிருக்கும் இலங்கை அரசாங்கத்தினால் வடக்கு- கிழக்கில் போரால் அழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. மீள் குடியேற்றமும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணமும் ஓர் பாரிய பணியாகும். ஆனால், அரசாங்கத்தில் உள்நாட்டு மூல வளங்கள் இப்பணிக்கான செலவிற்கு அப்பாறபட்டதாகும். எனவே சம பந்தப்பட்ட சர்வதேசங்களிடமிருந்து உதவி கேரவேண்டிய பாரிய பணி எம்முன் உள்ளது.

தமிழ் மக்களின் பாதுகாப்பையும் அவர்களது கௌரவமான சமூக, அரசியல், பொருளாதார, கல்வி, சட்டம் போன்ற வாழ்க்கை முறையையும் அவர்களது பிறப்புரிமையையும் உறுதிப்படுத்தும் ஒரு இடைக்காலநிர்வாக அமைப்பையே தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி இத்தகைய அதிகாரம் மிக்க அமைப்பே நீடித்த சமாதானத்திற்கு வழி வகுக்கும் என்பதில் தமிழ் மக்களாகிய நாம் மிகவும் உறுதியாக நிற்கின்றோம் என்றுள்ளது.

ஒனறியத்தலைவர் சூ.சிறில்,செயலாளர் ப. கனகலிங்கம் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச தூதரகங்கள, சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள ளன. (உ-16,4)

# இங்கிலாந்து- ஸ்கிறிப் நெற் ஏற்பாட்டில் திரைப்படத்துறைசார் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்தைச்சேர்ந்த ஸ்கிறிப் நெற் நிறுவனம் யாழ்.பல்கலைக் கழகப் புற நிலைப்படிப்புகள் அலகுடன் இணைந்து திரைப்படத் துறையைச் சார்ந்த மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ளோர் அனைவருக்கும் தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர்களுக்கான பயிற்சிப்பட்டறையை நடாத்தவுள்ளது.

இம்மாதம் 6ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை யாழ்.வைத்திய சாலை வீதியில் உள்ள தொடர்பகம் 657/01 என்னும் முகவரியில் நடை பெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் 50 வயதிற்குட்பட்ட ஆண், பெண்,சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.

பயிற்சி பெறவிரும்புவோர் சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பங்களை நாளை சனிக் கிழமை மு.ப. 10 மணி முதல் தொடர்பக மண்டபத்தில் நேரிலே அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பித்து தமது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி ஸ்கிறிப் நெற் நிறுவனம், யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகுடன் இணைந்து கடந்த வருடம் திரைக்கதை எழுத்தாளர்களுக்கான பயிற்சி நெறியை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (உ-8)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி (நீட்டல் பச்சை) வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003, ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான நீட்டல் பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை நீட்டல் பச்சை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது இவைகளில் அளவு மாற்றங்கள் அந்தந்த மாதங்களில் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003 ஒக்டோபர் (MT) | 2003 நவம்பர் (MT) | 2003 டிசம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 56 | 56 | 56 |
| 02 | கைதடி | 27 | 27 | 27 |
| 03 | கொடிகாமம் | 50 | 50 | 50 |
| 04 | உடுப்பிட்டி | 12 | 12 | 12 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 17 | 17 | 17 |
| 06 | பருத்தித்துறை | 45 | 45 | 45 |
| 07 | புலோலி | 10 | 10 | 10 |
| 08 | மருதங்கேணி | 31 | 31 | 31 |
| 09 | யாழ்ப்பாணம் | 123 | 123 | 123 |
| 10 | நல்லூர் | 64 | 64 | 64 |
| 11 | அச்சுவேலி | 57 | 57 | 57 |
| 12 | நீர்வேலி | 55 | 55 | 55 |
| 13 | மானிப்பாய் | 48 | 48 | 48 |
| 14 | பண்டத்தரிப்பு | 36 | 36 | 36 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 26 | 26 | 26 |
| 16 | தெல்லிப்பழை | 55 | 55 | 55 |
| 17 | [illegible] | 72 | [illegible] | [illegible] |
| 18 | சுன்னாகம் | 73 | 73 | 73 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 16 | 16 | 16 |
| 20 | வேலணை | 19 | 19 | 19 |
| 21 | ஊர்காவற்றுறை | 26 | 26 | 26 |
| 22 | காரைநகர் | 21 | 21 | 21 |
| 23 | தீவகம் | 4 | 4 | 4 |
| 24 | நெடுந்தீவு | 11 | 11 | 11 |
| | மொத்தம் | 954 | 954 | 954 |

2. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/-வினை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.10.03ஆம் திகதி தொடக்கம் 2003.10.16ம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்கமுடியாத கேள்விவைப்பாக ரூபா500/-ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி நீட்டல்பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபாலுறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.10.17 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பிற்பகல் 3.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
6. கேள்விப் பத்திரத்தின் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் ''அரிசி வழங்குவதற்கான கேள்வி'' என எழுதப்பட வேண்டும்.
7. கேள்வதாரர்கள் (BIDDERS) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும், அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறமதியில் 10 வீத மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுதல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலைமட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

செ.பத்மநாதன்
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
2003.10.02 (C-6724)

# மகளிர் சங்கமத்தில் இருந்து...



தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைக்கிறார்.



மாவீரர் காவியவேந்தனின் அன்னை ஈகச்சுடர் ஏற்றுகிறார்.



கலந்துகொண்ட பிரமுகர்கள்



பார்வையாளரில் ஒரு பகுதியினர்.

மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை
01.10.2003 முதல் 24.10.2003 வரை
தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
★ நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன டிசைன் துணிவகைகள்
★ அழகுக்கு அழகூட்டும் சாறிவகைகள்
★ றெடிமெட் ஆடைத் தினிசுகள்
★ ஆடவர்க்கேற்ற சேட், சூட் வகைகள்
சகல பொருட்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்
ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றிட
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2381
(C-6723)
மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

# ஈராக்பற்றிய தனது ஐ.நா.தீர்மானத்தில் அமெரிக்கா மாற்றங்களை செய்துள்ளது

## துருப்புகள் அனுப்புவதில் பல்தேசியப் பங்களிப்பை பெறமுயற்சி

(வாஷிங்கடன்)

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் பாது காப்பு சபையில் சமர்ப்பித்துள்ள ஈராக் தொடர்பான தனது நகல் தீர் மானத்தில் திருத்தங்களை செய் துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பங் களிப்பு ஈராக் விடயத்தில் அதி கரிக்கப்பட வேண்டும்.

ஈராக்கிய நிறுவனங்களுக்கு அதி காரம் மாற்றப்படவேண்டும் எனக் கோரும் முக்கிய அம்சங்கள் உட்பட,ஈராக்கில் நிலைநாட்டப் பட வுள்ள பல்தேசிய படைக்கு தமது துருப்புக்களை அனுப்பத் தயங்கும் நாடுகளிடமிருந்து அதிக பங் களிப்பை பெறுதல் ஆகிய விடயங் களில் திருத்தங்கள் செய்யப்பட்டு திருத்த நகல் சபையில் சமர்ப்பிக்கப பட்டுள்ளது.

இத்திருத்தங்களின் பிரகாரம் 25 உறுப்பினர்கள் அடங்கிய ஈராக்கிய நிர்வாக சபை நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயாரித்து, புதிய அரசியல் யாப்பை வரைவதற்கும், தேர்தலுக் கான திட்டங்களையும் அமெரிக்கா ஐ.நா. சபையில் சமர்ப்பிக்கும்.

எதிர்வரும் 23ஆம்திகதி நடை பெறவுள்ள ஈராக்கிற்கு நன்கொடை வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னராக இத்தீர்மானததிற்கான அங்க காரத்தை சபையில் பெறலாம் எனவும அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள ளது . (பி-2)



டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அலுவ லகத்துக்குப் கடந்த புதன்கிழமை வந்திருந்த காங்கிரஸ் பிரமுகரின் வானில், கட்சித் தலைவர் சோனியா காந்தியின் உருவம் இடம்பெற்ற பதாகை.

### திருப்பதிக்கு தரிசிக்கச் சென்ற சமயம்

# ஆந்திர முதல்வர் சந்திரபாபு மயிரிழையில் உயிர்தப்பினார்

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திர மாநிலம் திருப்பதியில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆந்திரமுதல்வர் சந்திரபாபு நாயுடு அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள் ளார்.

திருப்பதி வெங்கடாஜலபதி கோயிலில் தற்போது நடைபெற்று வரும் பிரமோற்சவ திருவிழாவில் சுவாமிதரிசனம் செய்வதற்காக முதல்வர் சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது. காரில் சென்று கொண்டிருந்த சமயம் அவரது காருக்கு அருகில் இக் குண்டு வெடிப்பு நடைபெற் றுள்ளது.

குண்டு வெடிப்பில் முதல்வர் காயமடைந்த போதும், தற்போது நலமாக இருப்பதாகவும் இவருடன் சென்ற ஆந்திர மாநிலவேலை வாய்ப் புத்துறை அமைச்சர் கோபால கிருஸ்ண ரெட்டி பலத்த காயமடைந்துள்ளார் என்றும் முதல்வரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (பி-2)

### வியட்னாம் சிறைகளில் வாடுகின்ற

# முதியவர்களை விடுதலைசெய்ய கோருகிறது மன்னிப்புச் சபை

(ஹனாய்)

ஜனநாயக நெறிமுறைகளை வெளிப்படுத்தியவர்கள்,சமயத்தலை வர்கள்,சுதந்திரமாக தகவல் வெளி யிட்டோர் உட்பட சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற முதியவர் களை வியட்னாம் உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என்று சர்வ தேச மன்னிப்புச் சபை தெரிவித் துள்ளது.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இந்த வேண்டுகோளை சர்வதேச மன்னிப்புச் சபை விடுத் துள்ளது.

வியட்னாமில் சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர்களில் 61-68 [illegible] பவர் கள் அடங்குவதாக சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை அவர் கள் அனைவரதும் தேக ஆரோக்கி யம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. வியட்னாமில் அரசுக்கு எதிராக கருத்துத் தெரி விப்பது சட்ட ரீதியாக தவறாகக் கருதப்படுகின்ற போதிலும் பொது இடங்களில் கருத்து வெளியிட்ட ஒரேகாரணத்திற்காக முதியவர் களை சிறையில் அடைப்பது நியாயத்துக்குப் புறம்பான செயல் என்று சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், வியட்னாம் சிறைச்சாலை களில் போதிய வசதிகள் இல்லாத துடன் மருத்துவப் பராமரிப்புகளும் அதிருப்திகரமாகக் காணப்படுவ தாக அந்தச் சபை சுட்டிக்காட்டி யுள்ளது. (பி-9)

# ஐரோ. ஒன்றிய எச்சரிக்கை


## ஈரான் அரசு நிராகரித்தது

(தெஹறரான்)

ஈரானிய அணுசக்தித் திட்டம் பற்றி ஐரோப்பிய யூனியன் விடுத்த எச்சரிக்கையை ஏற்க முடியாது என்று கூறி ஈரான் நிராகரித்துவிட்டது.

இந்த எச்சரிக்கை ஈரானுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையி லான ஒத்துழைப்புக் கோட்பாடுக ளுக்குப் புறம்பானது என்று ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் செய் தித் தொடர்பாளர் கூறினார்.

ஈரான் தனது அணுசக்தித் திட் டத்தை வெளிப்படையானதாக்கி அனுமதி பெறாவிட்டால் மோசமான பொருளாதார விளைவுகள் ஏற்படும் என்று கடந்த திங்கட்கிழமை பிறஸல் ஸில் ஐரோப்பிய யூனியன் எச்சரித் திருந்தது. (பி-9)



மறைந்த காங்கிரஸ் மூதத தலைவர் மாதவராவ் சிந்தியாவின் இரண்டாவது நினைவு நாள் நேற்று முன்தினம் கடை பிடிக்கப்பட்டது. குவாலியரில் உள்ள ஜெய் விலாஸ் மாளிகை யில், அவரது புகைப்படததிற்கு அஞ்சலி செலுததும் உறவி னர்கள்.

# சூகியை சந்திக்க ஐ.நா.தூதுவருக்கு இறுதிநேரத்தில் அனுமதி கிடைத்தது

(ரங்கூன்)

மியன்மாரிற்கு விஜயம் செய் துள்ள ஐக்கிய நாடுகளின் விசேட தூதுவர் ரஸாலி இஸ்மாயிலிற்கு இறுதி நேரத்தில் ஆங்சான்சூகியை சந்திக்க அன்நாட்டு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

நீண்டகாலமாக தடுப்புக்காவ லில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட் சித் தலைவி சூகியை விடுதலை செய யக்கோரும் வகையிலும் அவரைச் சந்தித்துப் பேசும் வகையிலும் இஸ் மாயல் மியன்மார் சென்றார். அங்கு இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களை நடத்த முடிந்த போதும் சூகியை பார்ப்பதற்கான அனுமதியை அவர்கள் வழங்கவில்லை.

இதனால் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்ப ஆயத்தமாகிய சமயம் இஸ்மாயி லிற்கு சூகியைப் பார்ப்பதற்கான அனு மதி வழங்கப்பட்டது.

மியன்மாரில் யெங்கோ நகரில் லிக்ஷைட் இல்லத்தில் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள சூகியை இவர் சந்தித்தபின்னரே நாடுதிரும்புவார் என்று தெரிவிக் கின்றது. (பி-2)

### உலக தரிசனம்

# 6 பேரைக்கொன்றவருக்கு 6 ஆயுள் தண்டனைகள்



மததிய ஜப்பானின் டோபா கடற்கரையில் ஒரு பள்ளி மாணவன் கண்டெடுததுதான் இந்த சிரிக்கும் நண்டு. இதன் ஓட்டில் காணப்படும் புள்ளிகளும், கோடுகளும் பார்ப்பவருக்கு சிரிப்பதைப் போன்ற தோற்றட்தை தருகின்றன. கடல்வாழ் [illegible]ன அருங்காட்சியகததில் இந்த நண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

(சென்னை)

தன் குடும்ப உறுப்பினர்கள் ஆறு பேரைக் கொலை செய்த நபருக்கு விழுப்புரம் நீதிமன்றம் 6ஆயுள் தண் டனைகளை விதித்துத் தீர்ப்பளித்துள ளது. இத்தண்டனைகளை அவர் ஏக காலத்தில் அனுபவிக்கவேண் டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விபரம் வருமாறு,

சங்கராபுரம் வட்டம்பாக்கம் கிரா மத்தைச் சேர்ந்தவர் அப்துல் கரீம் என்பவர் 23 வருடங்களுக்கு முன்பு பது ருண்ணிசா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

திருமணமான இரண்டு ஆண்டில் அப்துல் கரீம் வேலைக்காக வெளிநாடு சென்று இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊருக்கு வந்து சென்றார். இவ ருக்கு 6பெண்பிள்ளைகள் பிறந்தன. 2000ஆம் ஆண்டில் இவர் ஊருக்கு திரும்பி வந்து அங்கேயே தங்கி விட்டார்.அதன்பின் னர் குடும்பத்தில் தகராறு ஏற்பட்டு பதுருண்ணிசா தனது தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

அவரைச் சமாதானம் செய்து அழைத்துவந்து 3மாதம் குடும்பம் நடத்தினார் அப்துல் கரீம்.

இதற்கிடையில் மகள் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். தம் குடும்பம் பற்றி ஊருக்குள் தவ றாக பேசிக்கொள்வது அப்துல் கரீ முக்கு தெரியவந்தது. அதனால் ஆத்திரம் கொண்ட அவர் வீட்டுக்குப் பின் புறம் குழிவெட்டினார்.

மனைவி பதுருண்ணிசாவிடம் தோஷம் கழிக்கவேண்டும் என்று கூறி அந்தக் குழிக்கருகே அழைத் துச் சென்று அவர் கழுத்தைச் சேலை யால் இறுக்கிக் கொலைசெய்து குழிக்குள் தள்ளினார்.

பிறகு தமது மகள்மாரை ஒவ் வொருவராக வாய்களை பிளாஸ் திரியாள் ஒட்டியும், கைகளைப்பின் புறமாகக் கட்டியும், குழிக்குள் இறக் கியுள்ளார்.

பின்னர் மேலே சவுக்குக்கட்டை களைப் பரப்பி பிளாஸ்ரிக் தாள்க ளால் மூடி பின்பு குழியை மண்ணால நிரப்பி விட்டார். இதனால் மகள்களும் மூச்சுத்திணறி இறந்தனர்.

மறுநாள் நாகர் கோயில் சென்று அங்கே வேலை செய்து வந்தார். ஆனால், அவரது மனம் உறுத்திய தால் ஒரு மாதத்திற்கு பின்னர் தமது சகோதரியிடம் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துவிட்டு ஊருக்குச் சென்றுளளார்.

அங்கு கிராமநிர்வாக அலுவல ரிடம் தாம் செய்த கொலைகள் குறித்து ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள் ளார்.

இதை அடுத்து பிணங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இது குறித்து வடபொன்பரம்பி பொலி ஸார் வழக்குப்பதிந்தனர் .

இவ்வழக்கை விசாரித்த விழுப் புரம் மாவட்ட நீதிபதி இராமமூர்த்தி குற்றம் சாட்டப்பட்ட அப்துல் கரீமுக்கு 6ஆயுள் தண்டனைகளை விதித்து அவற்றை ஏக காலத்தில் அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டார். (பி-9)

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து எல்லாம் உளன்.
– குறள்

# வலம்புரி

## உண்மை ஒலித்திருக்கிறது

ஜே.வி.பியினால் அமைக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படும் தேசாபிமான இயக்கமானது 1983-ம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக எல்லே குணவன்ச தேரரினால் ஆரம்பிக்கபட்ட அமைப்பாகும். இவ்வாறு ஓர் உண்மையைக் கூறியிருக்கிறார் சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த சுஸந்த தேசப்பிரிய.

தேசாபிமான இயக்கமானது தீவிர இனவாதத்தைக் கொண்ட ஓர் அமைப்பாகும். இது புதிய பெயரைக் கொண்டு இயங்கினாலும் தமிழருக்கு எதிரான எல்லே குணவன்ச தேரரினால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பின் செயற்பாட்டை கொண்டுள்ளது எனவும் சுஸந்த தேசப்பிரிய மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

சிங்கள பத்திரிகையாளர் ஒருவர் பகிரங்கமாக ஜே.வி.பியின் இனவாதத்தை-தேசாபிமான இயக்கத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தியிருப்பது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வையே வெளிக்காட்டி நிற்கிறது.

ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக எழுதுவதன் மூலமே தங்களது பத்திரிகைகளின் ஆயுட் காலத்தை நீடிக்க முடியுமென இருந்த சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் இப்போது தமது நிலைப்பாட்டில் இருந்து மாறி தமிழ் மக்களுக்கு நடந்த துரோகத்தை எழுதுவதன் மூலமே சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியுமென்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளன. இதனையே சுஸந்த தேசப்பிரியவின் கருத்து சுட்டி நிற்கிறது.

ஜே.வி.பியினால் அமைக்கப்பட்டுள்ள தேசாபிமான இயக்கத்தின் நோக்கம் பற்றி தெளிவாகக் கூறிய சுஸந்த தேசப்பிரிய ஜே.வி.பி. ஓர் பயங்கரவாத அமைப்பு எனவும் ஜே.வி.பியின் செயற்பாட்டுக்கு தென்னிலங்கை மக்கள் ஒரு போதும் ஆதரவு வழங்கமாட்டார்கள் எனவும் கூறியுள்ளார்.

இலங்கையில் இனவாதப் பேய் தலைவிரித்தாடுவதற்கு தென்னிலங்கைச் சிங்களப் பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் ஒருவகையில் காரணமாக இருந்துள்ளார்கள் என்பதை ஒருபோதும் மறந்து விட முடியாது.

அவ்வப்போது ஏற்படுகின்ற இனவாதத் தீக்கு எண்ணெய் விடும் பணியை சிங்களப் பத்திரிகைகள் செய்து வந்தன. உண்மைகளை மறைத்து பொய்மைக்கு புகலிடம் கொடுத்ததன் விளைவாக இலங்கைத் திருநாட்டில் இரத்த ஆறு ஓடியது. மனித சடலங்கள் வீதிகளில் கிடந்தன. இத்தகைய கொடூரத்தை தடுப்பதில் சிங்களப் பத்திரிகைகள் ஒரு சதவதமேனும் உதவியிருந்தால் யுத்த அனர்த்தத்தில் பலியான மனிதர்களுக்கு இந்த மண்ணில் வாழும் சந்தர்ப்பத்தை வழங்கியிருக்க முடியும் இவை காலங் கடந்த ஞானமாயினும் இப்போதாவது சுஸந்த தேசப்பிரிய போன்ற பத்திரிகையாளர்கள் உண்மையை உரைக்க முன்வந்திருப்பதை மனதாரப் பாராட்ட வேண்டும்.

# புராண புருஷர்களும் இதிகாச மணிகளும் மேன்மை பெற உதவியது நவராத்திரியே!

## ஸ்ரீராமர் வழிபட்ட தேவி

தர்மத்தின் வடிவமான தர்மரும், திருமாலின் அவதாரமான ஸ்ரீராம பிரானும் தங்களின் வெற்றிக்கு நவ ராத்திரியை அனுஷ்டித்தார்கள்.

தனது மாங்கல்யம் குறையாமல் இருக்க சாவித்திரி இவ்விரதத்தை அனுஷ்டித்தாள்.

புராண புருஷர்களும், இதிகாச மணிகளும் மேன்மைபெற வழி காட்டியது நவராத்திரி விரதமே.

இரவில் செய்யப்படும் எல்லா விதமான பூஜைகளும் அன்னையைத்தான் சேரும்.

முன்னாளில் நவராத்திரி பூஜை- 'துர்க்கா பூஜை' என்றே வழங்கப் பட்டு வந்தது.

இந்தப் பூஜையில் ஸ்ரீவித்யா மந்திரங்களையும், உபதேச மந்திரங்களையும் பெரியோர்கள் ஜபம் செய்து, உரு ஏற்றிக் கொள்வார்கள்.

இராவணனுடைய வலிமை, அவன் தன் தவத்தினால் பெற்ற வரங்கள் ஆகியவற்றை உணர்ந்த ஸ்ரீராமர் அவனை எப்படி வெற்றி கொள்வது என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்.

அப்போது, லோபாமுத்திரையின கணவரும் சித்தர்களில் மூத்தவரும் உருவத்தால் குறுகி மந்திரத் திறனாலும் அறிவுத் தெளிவாலும் உயர்ந்தவருமான அகத்தியர் ஸ்ரீராம பிரானின் சிந்தனைக்கு முடிவுகட்டினார்.



அதாவது அவர், இராவணனை சம்ஹாரம் செய்யும் பூரண வலிமையைக் கொடுக்கும் 'ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரி' என்ற வித்யா மஹா மந்திரத்தை ஸ்ரீராமபிரானின் வலக்காதில் உபதேசித்தார். அதற்கிணங்க ஸ்ரீராமர் புரட்டாதி மாதம் சுக்கிலபட்சப் பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாட்களிலும் ஸ்ரீதேவியைப் பூஜித்து வழிபட்டார். ஆதலால் அவர் இராவணனை வென்று வெற்றிவாகை சூடினார்.

ஸ்ரீ கண்ணபிரானும் நவராத்திரி பூஜை செய்து அன்னையின் அருளைப் பெற்றார்.

வழக்கத்தில் முதல் மூன்று நாளும் தமோகுண நிறம்கொண்ட துர்க்கா தேவியையும், சதுர்த்தி முதல் மூன்று நாளும் ரஜோ குண நிறம் கொண்ட திருமகளையும், சப்தமி முதல் மூன்று நாளும் சத்வகுண மயமான வெண்ணிற சரஸ்வதியையும் பூஜை செய்கிறோம்.

பத்தாவது நாள விஜயதசமி என்று கொண்டாடுகிறோம்.

இந்த விஜயதசமி எப்படி வந்தது?



## பாண்டவர்கள் வழிபட்ட தேவி

பஞ்ச பாண்டவர்கள் துரியோதனாதியரிடம் தோற்றதால் நாட்டை இழந்து வாழும் நிலை ஏற்பட்டது. அவர்கள் காட்டில் மறைந்து வாழ்ந்த காலத்தில் தங்கள் ஆயுதங்களை ஒரு பெரிய வன்னி மரத்தின் பொந்தில் ஒளித்து வைத்திருந்தார்கள்.

இவ்விதம் அவர்களின் வனவாச காலத்தில் வன்னி மரம்தான் அவர்களது ஆயுதங்களின் பாதுகாப்புப் பெட்டகம் ஆயிற்று.

அவ்வாறு அவர்கள் மறைந்திருந்து வாழும்போது, மற்றவர்கள் தங்களைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கவும், அக்காலத்தில் தங்களைத் துன்பங்கள் தாக்காமல் இருக்கவும் என்ன வழி என்று தேடினார்கள்.

வனத்தில் தவம் செய்யும் பெரிய முனிவர்களிடம் சென்று வணங்கினார்கள்.

முனிவர்கள் பாண்டவர்களுக்கு ஸ்ரீ துர்க்காதேவியின் புகலிடத்தைக காட்டினார்கள்.

துன்பங்களிலிருந்து காப்பவளும், துன்பங்களிலிருந்து விடுவிப்பவளும் துர்க்கையே.

துர்க்கா தேவியை சரணடைந்தவர்களுக்கு துன்பத்தின் சாயல் கூடத் தொடராது. தாரித்திரியம், துக்கம், பயம் முதலியவற்றைப் போக்கி உலகிற்கு உபகாரம் செய்பவளே துர்க்கை.

இதை அறிந்த பாண்டவர்கள் தர்மரை முதலாகக் கொண்டு தேவியை வழிபட்டனர். மகரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட 'ஸ்ரீதுர்க்கா நட்சத்திர மாலிகா துதி' என்ற 27 சுலோகங்களைக் கொண்ட துதியால் நாள் தோறும் துதித்தார்கள். இதனால் தேவியின் திருவருள் கிட்டியது. அச்சுவினி முதல் ரேவதி முடிய 27 நட்சத்திர அதி தேவதைகளும், நட்சத்திரங்களும் அவர்களுக்கு ஆசி கூறி நன்மைகள் வழங்கத் தயாராக இருந்தன.

அஞ்ஞாதவாசம் முடிந்ததும் பாண்டவர்கள் வன்னிமரப் பொந்திலிருந்து தங்கள் ஆயுதங்களை எடுத்து அந்த மரத்தடியில்வைத்து பூஜித்தார்கள். வன துர்க்கையாகவும், எல்லாச் சங்கடங்களையும் போக்குபவளாகவும், தீமைகளை அடக்கி ஒடுக்கி நன்மைக்கு வெற்றி தருபவளாகவும் விளங்கும் தேவியை ஒன்பது நாட்களும் வழிபட்டனர். தசமியில் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள்.

விஜயம் தரும் தசமி என்பதாலும், அர்ச்சுனனாகிய விஜயனால் மிகவும் பயபக்தியுடன் பூஜிக்கப் பெற்றது என்பதாலும் இது 'விஜய தசமி' என்ற பெயர் பெற்றது. இதை ''விஜய நவராத்திரி'' என்றும், ''வன்னி நவராத்திரி'' என்றும், ''வனதுர்க்கா நவராத்திரி'' என்றும் அழைப்பது வழக்கம்.

## நவராத்திரி பூஜை

நவராத்திரியில் அமாவாசையன்று பூஜையை அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். அல்லது பிரதமை தினத்தன்று காலையில் விக்னேஸ்வர பூஜையைத் தொடங்கிக் கொள்வதும் உண்டு.

பிரதமை முதல் ஒன்பது நாட்களும் காலையும் இரவும் தேவியைப் பூஜிக்க வேண்டும்.

ஹோமங்களைக் காலையிலும், அர்ச்சனைகளை இரவிலும் செய்வது வழி வழி வழக்கம்.

நவராத்திரி ஒன்பது நாளும் பொய் நீக்கிய வாழ்வும், அன்னையின் புகழ்பேசும் நாவும் கொண்டு விளங்க வேண்டும்.

நவராத்திரி ஒன்பது நாட்களிலும் முறையே சைல புத்திரி, பிரம்மசாரிணி, சந்திர காண்டி, கூஷ்மாண்டி, ஸ்கந்த மாதா, காத்யாயினி, காலராத்திரி, மகாகௌரி, சித்திதா என்ற நவ துர்க்கையாக அன்னை நவ நாட்களிலும் ஒளிவிடுகிறாள். இதனால்தான் கன்யா பூஜையில் அந்தந்த நாளுக்குரிய தேவியாகப் பெண்குழந்தைகளை வரித்து பூஜை செய்யப் பெறுகிறது.

நவராத்திரி ஒன்பது நாட்களும் பகலில் சிறிதளவு உணவோ அல்லது ஏற்ற உணவோ உட்கொண்டு இரவில் பட்டினி இருக்கவேண்டும்.

ஒரு சிலர் பகலெல்லாம் நோன்பு இருந்து இரவில் அன்னையின் வழிபாடு நிறைவு பெற்றதும் சிற்றுண்டி உட்கொள்வதும் உண்டு. இதுவும் ஏற்றதே.

இந்த ஒன்பது நாட்களிலும் அன்னைக்கு பானகமும், தேனும் நிவேதிப்பது மிகவும் அவசியம்.

இக் காலத்தில் வீட்டிற்கு வரும் எல்லா சுவாசினிகளையும் ஜென்ம விரோதியாக இருந்தாலும் அன்னையாகவே பாவித்து அவர்களுக்குரிய மரியாதைகளைச் செய்யவேண்டும்.


முதல் மூன்று நாட்களில் துர்க்கா அஷ்டோத்திரமும் சகஸ்ர நாமமும் அதற்கு அடுத்த மூன்று நாட்களில் லக்ஷமி அஷ்டோத்திரமும் சகஸ்ர நாமமும் அதற்கு அடுத்த மூன்று நாட்களில் சரஸ்வதி அஷ்டோத்திரமும் சகஸ்ர நாமமும் ஜபிப்பதும் அர்ச்சனை செய்வதும் சிறப்பு.

உபாசகர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஜபம் செய்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு வலுப்

**பி. நாராயணன்**

பெறுகிறார்கள்.

இந் நாளில் ''தேவிமகாத்மியம்'' படிப்பவர்களுக்கும், அதைக் கேட்பவர்களுக்கும் சகல பாவங்களிலிருந்து விடுதலையும் மற்றும் பணக் கவலை, மனக்கவலை ஆகிவற்றிலிருந்தும் நிவாரணம் கிடைக்கப் பெறும்.



நவராத்திரியில் முதல் மூன்று நாட்களில் எலுமிச்சம் பழச்சாதமும் எள்ளுச் சாதமும், தயிர் சாதமும், (ஆகிய இவற்றில் ஒன்றை) நிவேதனம் செய்யலாம்.

அடுத்த மூன்று நாட்களில் சர்க்கரை அன்னம், பால் சாதம், கற்கண்டு அன்னம் ஆகியவற்றை நிவேதனம் செய்யலாம்.

அடுத்த மூன்று நாட்களில் வெண் பொங்கல், தேங்காய் சாதம், பால் சாதம், பலன்தரக் கூடியவை.

முதல் மூன்று நாட்களில் செம்மை நிற, மஞ்சள்நிற, நீலவண்ண மலர்கள் தேவிக்கு உகந்தவையாகும்.

அடுத்த மூன்று நாட்களில் செண்பகப்பூ, வில்வதளம், செந்தாமரை மலர், றோஜா மலர்கள், கதம்பம் நன்மை தருவன.

அடுத்த மூன்று நாட்களில மல்லிகை, முல்லை, நீலச்சம்பங்கி, நந்தியாவர்த்தம், வெண்தாமரை, துளசி இலைகள் பலன் தருவனவாகும். □

# வெள்ளி நற்சிந்தனை

## தினசரி தியானம்

### கடவுளின் நிலைத்த தன்மை

கடவுள் இருக்கிறாரா? தவறான செயலைச் செய்வதினின்றும் உங்களைத் தடுக்கும் ஏதோ ஒரு குரலை உங்களுள் நீங்கள் அவ்வப்போது உணர்ந்திருக்கிறீர்களா? உங்களுள் இருந்து உங்களை எச்சரிக்கும் இக் குரல் யாருடையது? தவறு செய்தபின் ஒருவர் அமைதியின்மை யையும் சஞ்சலத்தையும் உணர்வதில்லையா? எது இப்படிப்பட்ட உணர்வை நமக்குத் தந்தது? ஒரு நல்ல செயலைச் செய்து முடித்தபின் உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படவில்லையா? மகிழ்ச்சியை உண்டாக்கியவர் யார்? இவை யெல்லாம் சர்வ வல்லமை பொருந்திய ஏதோ ஒரு சக்தி இருக்கின்றது என்பதற்குப் போதுமான சான்றுகளாகும்.

**சுவாமி சிவானந்தர்**

# பன்னிரு வேங்கைகளின் 16வது நினைவு தினம்

(திருநெல்வேலி)

மூத்த தளபதிகளான குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளினதும் 16 ஆம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 5ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கை இராணுவத்தினரால் பலாலி படைத்தளத்தில் பலாத்காரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது குமரப்பா புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளும் கடந்த 1987 ஆம் ஆண்டு சயனைட் அருந்தி தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.

இதேவேளை, வல்வெட்டித்துறை தீருவிலில் மேற்படி பண்ணிரு வேங்கைகளின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நினைவு தினத்தை அனுஷ்டிக்க அனுமதிக்கக்கூடாது என படைத்தரப்பினர் அப்பகுதி மக்களை எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று அப் பகுதிக்குச் சென்ற வரணி படைத் தலைமையக கட்டளை அதிகாரி கேணல் தல்காகொட பொதுமக்களை இவ்வாறு எச்சரித்ததாகக் கூறப்படுகிறது. (த-43)

## அரிச்சுவடிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் பணிப்புரைக்கமைய, இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சும், இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் வைத்து இலவசமாக அரிச்சுவடிகளை வழங்கி வருகின்றது.

இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியன காரியாலய நேரத்தில் வந்து இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# அடக்குமுறைகளுக்குத் தீர்வுகாண்பதே மனித இனத்தின் உண்மையான சுதந்திரம்

## மகளிர் சங்கமத்தில் தமிழினி

(யாழ்ப்பாணம்)

பெண்கள் தம்மை மென்மையானவர்கள், அழகுப் பமைகள் என்று எண்ணும் அடிப்படைச் சிந்தனையில் இருந்து விடுபட்டு, நான் யார்? எனது பலம் என்ன, எனது பலவீனம் என்ன என்பதை உணர முற்படவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி வலியுறுத்தியுள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மகளிர் சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நிகழ்வில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இன்றைய நிலையில் பெண்கள் புறக்கணிக்கப்படவும், கழிவிரக்கத்துடன் நோக்கப்படவும் காரணம் அவர்கள் தங்களை சினிமா நாயகிகள் போல அழகுபடுத்திக்கொண்டு பேரப்பொருளாக வாழ்வதே ஆகும்.

இத்தகைய குறுகிய மனப்பான்மையை பெண்கள் தூக்கி எறிந்துவிட்டு தமது ஆற்றல், ஆளுமை, பலம் என்பனவற்றை உணர்ந்து இநதப் பரந்து விரிந்த உலகில் நன்றாக வாழவேண்டும் என்ற மனப்பக்குவத்துடன் வாழ்வைச் சீரமைக்க வேண்டும்.

ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரத்தை நிலைநிறுத்துவது மட்டுமல்ல சுதந்திரம். அடக்குமுறைகளுக்குத் தீர்வு காண்பதே மனித இனத்தின் உண்மையான சுதந்திரம். இதனை உணர்ந்தே எமது தலைவர் காலங்காலமாக ஆணுக்கு அடிமையாக வாழும் எம் இனப் பெண்களின் அடக்குமுறைகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதற்காக எமக்கொரு தக்கவழி அமைத்துத் தந்திருக்கிறார்.

அதனால் தான் நாம் இன்று ஆனால் செய்யக்கூடிய அத்தனையையும் பெண்களால் செய்யமுடியும் என்பதை உணர்த்தி வருகின்றோம்.

எமக்குப் பயிற்சி முகாமில் கற்றுத் தந்தது வெறும் போர்ப்பயிற்சி மட்டுமல்ல. சமூகத்தில் மனிதன் மனிதனாக வாழ என்னசெய்ய வேண்டும் என்பதுவும் தான்.

இந்த வகையில், தமிழ்ப் பெண்கள் பெண் சமூக முன்னேற்றங்களைக் கருத்தில்கொண்டு அடிமைத்தனத்தில் இருந்தும் தாழ்வு மனப்பான்மையில் இருந்தும் விடுபட்டு புதிய சிந்தனை உள்ளவர்களாக மாறவேண்டும் என்று தமிழினி மேலும் தெரிவித்தார். (இ-4,43)

# மோட்டோரோலா தொலைபேசி இலக்கம் இன்றுமுதல் மாற்றம்

## யாழ். ரெலிக்கொம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கான மோட்டோரோலா தொலைபேசி இணைப்புக்களுககுரிய (Wirless loop link) இலக்கங்கள் இன்றுமுதல் மாற்றம் செய்யப்படுவதாக யாழ். ரெலிக்கொம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் 9 இலக்கங்களாக இருந்த மோட்டோரோலா தொலைபேசி இலக்கங்கள் இன்று முதல் 10 இலக்கங்களாக மாற்றப்படுகின்றன.

இதன்படி பிரதேசக் குறியீட்டு இலக்கமான (Code Number) 07021என இருந்த இலக்கங்கள் இன்று முதல் 060221 என மாற்றப்படுகின்றது. (த)

# அவுஸ்ரேலிய செனற் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்ரேலிய செனற்சபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் நேற்றையதினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்து இங்குள்ள நிலைவரம் பற்றி ஆராய்ந்தனர்.

ஜோன் வக்ஸன மார்க் விஷப் றொபேட் றோவ் ஹமரோம் தோம்ஸன் உள்ளிட்ட 7 செனற்சபை உறுப்பினர்களும் இலங்கைக்கான அவுஸ்ரேலய தூதரக அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வந்தவர்களாவர்.

இக்குழுவினர் பிற்பகல் யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். பத்மநாதன், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ். சிவபாதசுந்தரம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோரைச் சந்தித்தனர்.

இதன்போது தற்போதைய குடாநாட்டு நிலைமைகள், சமாதான நடவடிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னுள்ள நிலைமைகள் ஆகியன தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்தனர்.

இச்சநதிப்பை முடித்துக்கொண்டு யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்துக்குச் சென்ற இக்குழுவினர் அதன் பணிகள் தொடர்பாக ஆராய்ந்துவிட்டு உடனடியாகவே கொழும்பு திரும்பினர். (உ-16)

# 49 சிறுவர்களை விடுதலைப் புலிகள் யுனிசெப்பிடம் நேற்று ஒப்படைத்தனர்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்திருந்த 49 சிறுவர்கள் நேற்று விடுதலைப்புலிகளால் யுனிசெவ் அமைப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவச் செயலகத்தில் ஒப்படைக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இச்சிறுவர்கள் இன்று கிளிநொச்சியில் திறக்கப்படவுள்ள யுனிசெவ் அமைப்பின் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டு 3 மாதங்களின் பின்னரே அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிககப்படுகிறது. (இ)

## விவசாயபீட பொது அறிவுப் போட்டி

யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீட மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் ஜெயக்குமார், கிருபாகரன் ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டி நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி பாடசாலைகளுக்கான போட்டி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் தென்மராட்சி, வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் மேற்கு பாடசாலைகளுக்கான போட்டி யாழ்.பல்கலைகழக விவசாய பீடத்திலும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கான போட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (இ-5)

## ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம் முடிவு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தது.

ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு, ரயில்வே துறைசார் ஐக்கிய தொழிற்சங்க முன்னணி என்பன நேற்று நடத்திய கலந்துரையாடலிலேயே வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதென முடிபு எடுக்கப்பட்டது. (த)

# தென்மாகாணத்தில் வெள்ளம் மண்சரிவு

# 781 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக காலி மாவட்டத்தில் 732குடும்பங்களும் மாத்தறை மாவட்டத்தில் 49குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெள்ளப்பெருக்குக் காரணமாக காலி மாவட்டத்தில் உயிரிழந்த ஏழு பேரில் 6 பேர் இயக்கல முல்ல பிரதேசவாசிகள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

காலி மாவட்டத்தில் வெளிப்பிட்டிய, வத்தேகம, இயக்கலமுல்ல, எல்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் வெள்ள அபாயத்துடன் மண்சரிவும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இயக்கலமுல்ல பிரதேசத்தில்-6 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதோடு, அஙகு பாதிக்கப்பட்டவர்களைத் தேடும் பணிகளுக்காக மீட்புக் குழுக்களும் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, தென்மாகாணத்தில வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் உயிரிழந்த 8 பேரின் இறுதிச் சடங்குகளுக்காக தலா 15 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-61,8)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வாணி விழா, நாளை காலை 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# சட்டவிரோத மண் அகழ்வு குறித்து மக்கள் முறையிட்டும் பயனில்லை

(நவக்கிரி)

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டை அமைந்துள்ள அரசிற்கு சொந்தமான காணிகளில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு வருகின்றது.

இதனால், மழை காலங்களில் இப்பகுதியில் நீர்தேங்கி நிற்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், பிரதேச செயலர் மற்றும் பொலிஸ் நிலையம் என்பவற்றில் பல தடவை முறைப்பாடு செய்துள்ள போதும் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் கூறப்படுகிறது. (உ-233)

## போட்டியில் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வை முன்னிட்டு யாழ்ப்பாண பிரதேச செயலகம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவி தெ.கோகுலா முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப மாணவியை கௌரவிக்கும் வகையில் வித்தியாலய அதிபர் எஸ்.நடராஜலிங்கம் தலைமையில் பாராட்டு நிகழ்வொன்றும் இடம்பெற்றுள்ளது. (இ)

# சமாதான...

விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து விட்டு ஒரு தலைப்பட்சமான முடிவை மேற்கொள்ளும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

விடுதலைப் புலிகள் தாம் தயாரித்துள்ள இடைக்காலத் திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக அயர்லாநதுக்குப் புறப்படுகின்றனர். அங்கு இடைக்காலத் திட்டவரைபு குறித்து ஆராய்ந்த பின்னர் நோர்வே இராஜதந்திரிகள் ஊடாக எம்மிடம் இடைக்காலத் திட்டவரைபு சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது.

அதனை நாம் பெற்றுக்கொண்ட பின்னர் அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய சாதகமான சூழல் உருவாகும்.

ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பில், அரசியல் கட்சிகளுக்கிடையே பொது இணக்கப்பாடு இல்லை.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் வரைபு கிடைக்கப் பெற்றதும் பெரும் புரளிகளைக் கிளப்பி விடுவதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருவதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மக்கள் மத்தியில் இவ்வாறான ஊகங்களைக் கிளப்பிவிடுவதன் மூலம் சமாதான முயற்சிகளை முறியடிக்க எதிர்க்கட்சிகள் திட்டம் தீட்டியுள்ளன என அமைச்சர் பீரிஸ தெரிவித்தார். (த)

# புலிகளின் பிரதிநிதிகள்...

யிலான குழுவினர் நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விசேட உலங்கு வானுார்தி மூலம் கொழும்பை சென்றடைந்துள்ளனர்.

இம்மாதம் 5ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 3 கட்டங்களாக அயர்லாந்தின் டப்ளின் நகரில் கலந்துரையாடல் இடம் பெறும்.அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவில் மட்டு -அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மானும் விடுதலைப புலிகளின் பெண் போராளிகளான தமிழ்விழி ,செல்வி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

ஏற்கனவே ஜோய மகேஸ் வரன், சிரான் பணிப்பாளர் இரேனியஸ செல்வின் ,விடுதலைப்புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோர் அயர்லாந்து சென்றுள்ளனர். (6)

## திரைப்பட தயாரிப்பாளர் காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முதல் தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளரான கலாதீஸ்வரன் பி.எவ்.கிருஸ்ணகுமார் காலமானார்.

நோய்வாய்ப்பட்டு சீதுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் காலமானார்.

இவர் தோட்டக்காரி,மீனவர்கள் போன்ற திரைப்படங்களைத் தயாரித்து கதாநாயகனாக நடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# இடைக்கால சபை...

பேசும்போது குறிப்பிட்டதாவது,

எமது அயர்லாந்து விஜயத்தின் போது அங்கு சட்ட நிபுணருடன் கலந்துரையாடி இடைக்கால நிர்வாக சபை தொடர்பான இறுதி வடிவத்தைப் பூர்த்திசெய்யவுள்ளோம். சர்வதே சட்ட நிபுணர்களையும், சமாதான முன்னெடுப்பு அனுபவ வல்லுநர்களையும், சந்தித்து அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறியவுள்ளோம்.

ஒருவாரகாலம் அயர்லாந்தில் தங்கியிருக்கும் நாம் மூன்று கட்டங்களாகக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம். கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சீரழிந்துபோயுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்காலத்தில் திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கு ஓர் அமைப்பை உருவாக்கவுள்ளோம்.

அயர்லாந்து மக்களும் எம்மைப் போலவே போராடி உரிமைகளைப் பெற்றுள்ளனர். அயர்லாந்து மக்கள் போராடிய போது இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தொடர்புடைய நிபுணர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளையும் பெறவுள்ளதுடன், சிக்கலான விடயங்களில் அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகள் தொடர்பான அனுபவங்களையும் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவுள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஈழப்பெண்களின் ஆளுமையை...

படுத்திய சமூகத்தினால் நாம் போகப் பொருளாகவே கருதப்பட்டோம்.

எம் ஆளுமைகள், திறமைகள், ஆற்றல்கள் என்பன முடக்கப்பட்டு நாம் இருளில் மூழ்கிக்கிடந்தோம்.

எம்மிடமுள்ள ஆற்றல்கள், திறமைகளை வெளிப்படுத்த சிறந்த களம் தேவை என்பதை உணர்ந்து கொண்ட எமது தேசியத் தலைவர், இந்த விடுதலைப் பேராட்டத்தினூடு அதற்கு வழிசமைத்தார். பெண்களால் அதுவும் குறிப்பாக தமிழீழப் பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தினார்.

தலைவரின் வழிப்படுத்தலில் எண்ணற்ற களங்களில் சமராடி, இன விடுதலைப் போராட்டச் சரித்திரத்தில் உயா இடத்தில் பெண்கள் மதிக்கப்படும் நிலை எய்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை ஒதுங்கி நிற்கின்ற ஏனைய பெண்களும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

இன விடுதலைப் போராட்டத்தினூடு பெண் விடுதலைப் போராட்டத்தையும் முன்னெடுத்து விரைவில் விடிவைக் காண முயல்வோம்.

உதயமாகும் எமது சுதந்தர தமிழீழத்தில், பெண்இனம் விடுதலை பெற்ற ஆளுமைமிக்கதாகத் திகழ இன்றே சிறந்த அடித்தளமிடுவோம்.

தன்னாட்சியுடன் எமது இனம் வாழும் போது, அதில் சம பங்காளிகளாக பெண்களும் நிலைநிற்க வேண்டும் என்கின்ற உறுதித் தீயை நெஞ்சில் மூட்டும் போது தான் அது பெரு நெருப்பாக எரிந்து எமது பெண் சமூகத்தின் எழுச்சியையும் வளர்ச்சியையும் உலக மட்டத்தில் பறைசாற்றும்.

இப்படியான நிகழ்வுகளை பயனுள்ளதாக மாற்றுதற்கு, பெண் விடுதலை என்ற இலட்சியத் தீயை இங்கு சங்கமித்திருக்கும் அனைவரும் நெஞ்சில் சுமப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து, தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் சு.தமிழினி உடபடப் பலரும் கருத்துரைகளை வழங்கினர். (உ-4,7)

பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.